திருவாசி என்னும்

திருப்பாச்சிலாச்சிராமக் கோயில் வரலாறு



திருக்கோயில் வெளியீடு

(உரிமைப் பதிவு)

1994

உ

சிவமயம்

திருவாசி என்னும்

திருப்பாச்சிலாச்சிராமக் கோயில் வரலாறு

தொகுத்தோர் :

தமிழகப் புலவர்குழுவில் ஒருவரும்

திருச்சி-மௌனகுருவழிபாட்டுக் கழகச் செயலாளருமான

திருமுறைக்கலைஞர்

வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்

மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி-2.

திருக்கோயில் வெளியீடு

உரிமைப் பதிவு] 1994 [விலை ரூ. 6

முதற் பதிப்பு — 1971

இரண்டாம் பதிப்பு — 1994

பிரதிகள் : 1,000

இப்புத்தகம் கிடைக்குமிடம் :

அருள்மிகு மாற்றுரைவரதீசுவரர் திருக்கோயில்,
திருவாசி P. O., லால்குடி வட்டம்
(திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

கீதா பிரஸ், சாலை ரோடு, திருச்சி-18.

உ

சிவமயம்

அணிந்துரை

பாரத நாடு தெய்வத் திருக்கோவில்களை தன்னகத்தேக் கொண்ட தனக்கென்று தனித் தன்மை பெற்ற காலத்தை வென்ற பண்பாடு மற்றும் கலாசாரத்தைக் கொண்ட திருநாடாகும். அதிலும் தமிழ்நாட்டில் இத்தகைய தெய்வத் திருக்கோவில்கள் அதிக அளவில் மண்டி இருப்பதை நாம் தமிழக மெங்கும் அனுபவித்து மகிழலாம்.

மூவராலும் பாடப்பெற்ற ஸ்தலங்களை கொண்ட நாடு நடுநாடு, சோழநாடு காவிரி வடகரை, சோழநாடு காவிரி தென் கரை, பாண்டி நாடு, கொங்கு நாடு, மலைநாடு, துளுவநாடு வடநாடு, ஈழநாடு என 11 வகையால் பிரிப்பர்.

அதில் சோழ நாடு காவிரி வடகரை பிரிவில் அமைந்துள்ளது– தான் மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் என மூன்றிற்கும் சிறப்புப் பெற்ற திருவாசி என்றும் திருப்பாச்சிலாச்சிராமத் திருக் கோவிலாகும்.

திருஞானசம்பந்தராலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் பாடல்பெற்ற ஸ்தலமாகவும் திருநாவுக்கரசு சுவாமிகளால் வைப்பு ஸ்தலமாகவும் பாடல் பெற்ற சிறப்பு இத்தலத்திற்கு உண்டு.

இத்திருக்கோவில் அம்பிகை அன்னப்பறவை வடிவில் இருந்து திருக்கோவில் பொய்கையில் நீராடி இறைவனை பூசித்து இறையருள் பெற்றதால் இப்பொய்கையினை இன்னமும் அன்னமாம் பொய்கை என்று அழைப்பதும், திருநாவுக்கரசு சுவாமிகள் '' அன்னமாம் பொய்கை சூழ் அம்பரானை ...... '' என்று குறிப்பிடுவதும் இத்தல தீர்த்தத்தின் மகிமையை விளக்கும்.

மேலும் மூர்த்தி சிறப்பினை குறிப்பிடும் பொழுது, இத்திருக்கோவில் காணப்படும் நடராஜமூர்த்தி வழக்கமாக முயலகன் முதுகினில் காலை ஊன்றி விரிசடை திருக்கோலத்தில் ஆடாது நாகத்தின் தலை மீது கால் ஊன்றி முடித்த சடையுடன் ஆடுவது தனிச் சிறப்பாகும். இதனை திருஞான சம்பந்தர் தேவாரத்தில் '' சுடர் சடை சுற்றி முடித்து '' என்பதிலிருந்து தெளிவாகும்.

இவ்வாறு மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் மூன்று பெருமைகளைக் கொண்ட இத்திருக்கோவிலை வரலாற்றினை ஒன்றும் விடாமல் செம்மையாக வரிசைப்படுத்தி அரும்பாடுபட்டு ஸ்தல வரலாறு தொகுத்ததை இரண்டாம் பதிப்பிற்கு எடுத்த முயற்சி பெரிதும் பாராட்டுக்குரியதாகும். பாமர மக்கள் முதல் பண்டிதர் வரை படித்து அறிந்து கொள்ளவேண்டிய அநேக தெய்வீகச் சிறப்பு செய்திகளைக் கொண்ட இந்நூல் மிகப்பெருமையுடையதாகும்.

ஜி. இராஜநாயகம், பி. ஏ. பி. எல்.,
துணை ஆணையர்,
தமிழ் நாடு அரசு இந்து சமய
அறநிலைய ஆட்சித்துறை,
திருச்சிராப்பள்ளி.

உ
சிவமயம்

பாராட்டுரை

பாரினிலே நல்ல நாடு நம் பாரதநாடு. நல்ல நாடு என்ற சொல். தெய்வீகத்தன்மை வாய்ந்த நாடு. ஆன்மீக பற்று நிறைந்த நாடு அமைதியின் இருப்பிடமாகும். இவ்வளவு சிறப்புக்குக் காரணம் நம் நாடு தெய்வீகத் தன்மையில் பற்றுக் கொண்டதாலேயாகும்.

நம் பாரத நாட்டிலும் முதன்மையான ஆன்மீகம் சிறக்க வாழ்ந்து வரும் தென்னக நாட்டிலே காவிரிக்கரையோரமாகவே அதன் சிறப்பு இன்றும் தொய்வின்றி நடந்து வருகின்றது. நமது சைவ சமய குரவர்களான நால்வர்களும் இக்காவிரிக்கரை காடுகையில் தான் வாசம் செய்து இறைத்தன்மையை நிலை நாட்டி நமக்கு விட்டுச் சென்றுள்ளார்கள். அப்படி நமது சைவக் குரவர்கள் தங்களுடைய பாடல்களால் நமது இறைத்தன்மையை வழிவழி வரும் நமது சைவ சமய சந்ததியார்க்கும் விட்டுச் சென்றுள்ள பொக்கிஷங்கள் திருக்கோயில்கள் ஆகும் தங்களது அரும்பெரும் பாடல்களை ஆண்டவனைப்பாடி அவர்கள் அழிந்தாலும் அவர்களது இறைத்தன்மை அழியாது இன்றும் நமக்கு இறைவழிபாட்டை ஊக்குவிப்பதாக அமைகின்றது.

சைவக்குரவர்கள் பாடல்கள் பெற்ற திருத்தலங்களிலே தொன்மை வாய்ந்து மூர்த்தி, ஸ்தலம், கீர்த்தி, தீர்த்தம் போன்றவற்றால் இன்றும் சிறப்புற்று அமைந்துள்ளது, சோழநாட்டின் காவிரி வடகரையிலே **திருவாசி** என்னும் **திருப்பாச்சிலாச்சிராமத் திருக்கோயிலாகும்.**

நமது சைவ சமயக்குரவர்கள் ஞானசம்பந்தர், சுந்தர மூர்த்தி நாயனார் ஆகியோரால் பாடல் பெற்றதும் திருநாவுக்கரசு சுவாமிகளால் வைப்பு ஸ்தலமாகவும் பாடல் பெற்ற சிறப்பு இத்தலத்திற்கு உண்டு. இவ்வளவு சிறப்புப் பெற்ற இத்திருக்கோயிலின் வரலாற்றினை எள்ளளவும் சிதறாமல் சிதையாமல் வரிசைப்படுத்தி முறையான நூலினை மறுபதிப்பிற்கு செயல் அலுவலர் திரு. கே. நடராஜன் முயற்சி பெரிதும் பாராட்டத்தகுந்ததாகும். இன்றும் ஆன்மீகச் சிந்தனை கொள்பவர் மூலம் அடிமட்ட தொண்டர் வரை அனைவரும் படித்து தெய்வீக மணங்கமழ பூஜிப்பதற்கும் வாசிப்பதற்கும் சிறந்த ஒன்றாக அமைந்துள்ளது. எல்லோரும் இந்நூலைப்படித்து திருவாசி இறைவனின் அருள்பெற வேண்டுகிறேன்.

வெ. சின்ன சுப்பிரமணியன், எம்.ஏ.,
தக்கார்,
அருள்மிகு மாற்றுரைவரதீஸ்வரர்
திருக்கோயில், திருவாசி
மற்றும்
செயல் அலுவலர்,
அருள்மிகு உத்தமர் கோவில்
பிட்சாண்டார் கோயில், திருச்சி.

உ

சிவமயம்

முன்னுரை

"கால்களால் பயன் என்? கறை கண்டான் உறை கோயில் கோல கோபுர கோகர்ணம் சூழா இக்கால்களால் பயன்'' என்றார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

கடவுள் படைப்பிலே சிந்திக்கும் திறன் படைத்தது மனித பிறவி ஒன்றுதான். அவ்வாறு சிந்தித்து, மனிதன் புனிதனாகி, அப்புனிதத்தின் வெளிப்பாடாக வந்ததுதான் தெய்வ மணம் கமழும் திருக்கோவில்களாகும்.

இத்தகைய சிறப்புடைய தெய்வ மணம் கமழும் திருக்கோவில்களில் சிறந்து விளங்குவது திருவாசி என்னும் திருப்பாச்சிலாச்சிரமத் திருக்கோவிலாகும். கி.பி. 7-ம் நூற்றாண்டில் வாழ்ந்த அருளாளர்களாகிய திருஞானசம்பந்தர், அதற்கு பின் வந்த 8-ம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் பாடல் பெற்றதும் கி.பி. 9-ம் நூற்றாண்டு முதல் சோழப் பேரரசர்களாலும் திருப்பணிகள் செய்து போற்றி பாதுகாக்கப்பட்டு இன்றளவும் வான் உயர்ந்து நிற்கும் இத்திருக்கோவிலின் சிறப்பினை விளக்கும் இந்நூல் திருக்கோயில் வெளியீடாக வெளிவருகிறது.

இந்நூலை மறுபதிப்பு செய்து வெளியிட ஆக்கமும் ஊக்கமும் அளித்து அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த, இந்து சமய அறநிலையத்துறை, துணை ஆணையர் உயர்திரு. ஜி. இராஜநாயகம் பி.ஏ.பி.எல்., அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

மேலும் இந்நூலை அச்சிட்டு உபயமாக வெளியிட முன்வந்து உதவிய அன்பருக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டுக் கொடுத்த **கீதா பிரஸ், திருச்சி** அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலில் திருக்கோவில் நிழற்படம், புராண வரலாற்றுப் படம், தேவாரம் முதலிய பாடல்களும், பொது துதிப்பாடல்களும் சேர்க்கப் பெற்றுள்ளன. அன்பர்கள் அனைவரும் இந்நூலைப் பெற்றுப்படித்து பயன் பெற அருள்தரும் பாலாம்பிகை உடனுறை அருள்மிகு மாற்றுரைவரதீசுவரரின் திருவருளை தியானிக்கிறேன்.

இவண்,
கே. நடராஜன் பி. ஏ.
செயல் அலுவலர்
அருள்மிகு மாற்றுரைவரதீஸ்வரர் திருக்கோயில்
திருவாசி.

உள்ளுறை

—o—

எண்	பொருள்		பக்கம்
1.	தோற்றுவாய்	...	1
2.	தலமும் இருப்பிடமும்	...	3
3.	திருக்கோயில் அமைப்பு	...	6
4,	திருக்கோயிலின் படம்	...	8
5.	தல விருட்சம்	...	9
6.	மூர்த்தியின் பெயர்	...	10
7	தீர்த்தங்கள்	...	11
8.	தலப்பெருமை	...	12
9.	வழிபட்டோர்	...	13
10.	சுற்றுக்கோயில்கள்	...	13
11,	பூசையும் திருவிழாவும்	...	15
12.	திருப்பணிகள்	...	24
13,	நிர்வாகம்	...	26
14.	வருமானமும் சொத்துக்களும்	...	27
15.	சிற்பச் சிறப்புக்கள்	...	28
16.	கல்வெட்டுக்கள்	...	29
17.	புராண வரலாறுகள்	...	32
18.	தேவாரத் திருப்பாடல்கள்	...	41
19.	பொது துதிப்பாடல்கள்	...	50

தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாக அமைப்பு

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்
முதலமைச்சர்
தமிழ்நாடு

மாண்புமிகு நடேசன் பால்ராஜ் அவர்கள்
அறநிலையத்துறை அமைச்சர்

உயர்திரு. எஸ். சாவர்க்கர், I. A. S., அவர்கள்
ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை - 34

உயர்திரு. டி. ரத்தினவேல், M. A., M. L. A., அவர்கள்
திருச்சி மாவட்ட
திருக்கோயில் நிர்வாக வாரியக்குழுத் தலைவர்

உயர்திரு. ஜி ராஜநாயகம், B. A., B. L., அவர்கள்
துணை ஆணையர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, திருச்சி-6

உயர்திரு. ஆர். பத்மநாபன், B. Sc., B. L., அவர்கள்
உதவி ஆணையர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, திருச்சி-2

திருக்கோயில் நிர்வாகம்:

உயர்திரு. வி. சின்ன சுப்ரமணியம், எம். ஏ., அவர்கள்
தக்கார்: அருள்மிகு மாற்றுரை வரதீஸ்வரர் திருக்கோயில்
திருவாசி, லால்குடி வட்டம்

உயர்திரு. K. நடராஜன், B. A., அவர்கள்
நிர்வாக அதிகாரி
அருள்மிகு மாற்றுரை வரதீஸ்வரர் திருக்கோயில்
திருவாசி, லால்குடி வட்டம்



அரவத்தின் மீதாடும் ஆடல்வல்லான்
(ஸ்ரீநடராசர்)

திருப்பாச்சிலாச்சிராமத்தில்



திருஞானசம்பந்தர் பதிகம்பாடிக் கொல்லிமழவனது மகளின்
தீராத முயலகநோய் நீங்கப்பெற்ற அற்புதம்!

உ

சிவசிவ

திருவாசி என்னும்

திருப்பாச்சிலாச்சிராமத் திருக்கோயில் வரலாறு

ஸ்ரீ மாற்றறிவரதீசுவரர் துதி

துணிவளர் திங்கள் துளங்கிவிளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய்து பாச்சி
லாச்சிராமத் துறைகின்ற
மணிவளர்கண்ட ரோமங்கையை வாட
மயல்செய்வதோ இவர் மாண்பே.

— திருஞானசம்பந்தர் தேவாரம்

1. தோற்றுவாய்

அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்த பரம்பொருளும், மனவாக்குக் காயங்களைக் கடந்த செம்பொருளும், மூன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளும் ஆகிய கடவுள் — அருவம், அருவுருவம், உருவம் என்ற மூன்று நிலையில் விளங்குபவர். அருவம்—உருவம் இல்லாத நிலை ; நிட்களம். அருவுருவம்—உருவமும் அருவமும் உடைய நிலை; சகளநிட்களம். உருவம் – கைகால் முதலிய அங்கங்கள் உடைய வடிவ நிலை ; சகளம்.

அருவநிலையில் விளங்கும் இறைவன், தம்மை வழிபடும் தேவர்களுக்கும் மானுடர்களுக்கும், ஏனைய உயிர்களுக்கும் திருவருள் செய்யும் பொருட்டுத் தமது அருவ நிலையிலிருந்து இறங்கி **அருவுருவத்திருமேனி** அல்லது உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளி அருள் புரியும் இடமே **ஆலயம்** அல்லது **திருக்கோயில்** என்று நூல்கள் கூறும். ஆ + லயம் = ஆலயம் ; ஆ—ஆன்மா, லயம்—கடவுளை அடையும் இடம். திரு + கோ + இல் = திருக்கோயில். கோ — கடவுள். இல் — எழுந்தருளிய இடம். திரு — தெய்வ சாந்நித்தியம் ; மங்கலமொழி

நம் உடம்பு முழுவதும் உயிர்கலந்து நிற்பதாயினும் சில இடங்களை நாம் உயிர்நிலை என்கிறோம். அதுபோல இறைவன் எங்கும் நிறைந்து நிற்பினும் திருக்கோயிலே அவன் எழுந்தருளி அருள் புரியும் இடம் என்பதாம். ஆகவே மக்கள் எளிதில் இறைவன் திருவருளைப் பெறும் இடமாகத் திகழ்வது திருக்கோயிலே ஆகும். ''கோயில் விளங்கக் குடி விளங்கும்'' என்ற பழமொழிப்படி நாட்டின் நலத்திற்கும் மக்கள் நல்வாழ்விற்கும் திருக்கோயில் இன்றியமையாததாம்.

அருவுருவத் திருமேனி என்பது **சிவலிங்க வடிவம்**. இலிங்கம் என்பது சிவமே, சிவத்தின் பெயராகிய இலிங்கம் என்ற சொல் உபசாரம். இது கல், மணி, படிகம், உலோகம், மரம், மண் முதலியவற்றால் அமைந்துள்ள சிவவடிவமே. சிவலிங்கத்தில் சங்கார காலத்தில் சகல பிரபஞ்சமும் ஒடுங்கிய பின் சிருஷ்டி காலத்தில் உற்பத்தியாகுவதாகும் ஆகவே, படைப்பு முதலியவற்றால் உலகத்தை சித்திரித்தலாகிய சிவபெருமானின் பிரபாவமே இலிங்கம். (இலங் — லயம், கம் தோற்றம் இலிங்கம் — சித்திரித்தல்).

சிவலிங்கத்தில் சிவநாபம்(உருத்திரமாகிய குழவி) ஞானசத்தி கோமுகி பொருந்திய ஆவுடையாளாகிய பிண்டிகை (பீடம்) கிரியா சத்தி. வட்டமாகிய கீழ்ப்பீடம் இச்சாசத்தி, இலிங்கத்தின் குழவிபாகம் உருத்திரன், ஆவுடையாள் பாகம் விஷ்ணு, கீழ் அடிவட்டமான பாகம் பிரம்மன். ஆகவே இலிங்கம் திரிமூர்த்தி வடிவம் ஆகும்.

சிவலிங்கத்தில் உருத்திரத்தின் மேல் பாகம், மேற்குப் பாகம், வடக்குப் பாகம், தெற்குப் பாகம், கிழக்குப் பாகம் இந்த ஐந்திடங்களிலும் முறையே ஈசானம், சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம் என்ற ஐந்து திருமுகங்கள் கற்பிக்கப்படும். ஆகவே சிவலிங்கம் சதாசிவ மூர்த்தி ஆவர்.

உருவத்திருமேனி என்பது சந்திரசேகரர், சோமாஸ் கந்தர், நடராசர், காலசம்மாரர், சலந்தரசம்மாரர், தட்சிணாமூர்த்தி முதலிய இருபத்தைந்து மகேசுவர மூர்த்தங்கள் ஆகும். இவை போகவடிவம், வேகவடிவம், யோகவடிவம் என்ற மூன்றாம். அம்மையாரோடு எழுந்தருளிய சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், நடராசர் முதலிய திருவுருவங்கள் போக வடிவமாகும். அம்மையார் இல்லாது எழுந்தருளிய பாலசம்மாரர், கஜசம்மாரர், சலந்தர சம்மாரர் முதலிய திருவுருவங்கள் கோரவடிவமாகும். தட்சிணாமூர்த்தித் திருவுருவம் யோகவடிவமாகும். இம்மகேசுவர மூர்த்திகள் யாவரும் சதாசிவ மூர்த்தியின் — சிவலிங்க மூர்த்தியின் அம்சத்தையும் படைத்தல் முதலிய ஐந்தொழில்களின் அதிகாரத்தையும் பெற்று விளங்குபவர் ஆவர்.

இம்மை மறுமைப் போகங்களை விரும்புவர் போக வடிவத்தையும், உலகில் வெற்றியை விரும்புபவர் வேக வடிவத்தையும், சிவ ஞானத்தை விரும்புவர் யோகவடிவத்தையும் வழிபடுதல் வேண்டும் என நூல்கள் கூறும்.

பெரும்பாலும் திருக்கோயில்கள் - சிவாலயங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் இம்மூன்று பெருமைகளை உடையனவாகத் திகழும். இம்மூன்று பெருமைகளுடன் தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற 274-சிவத்தலங்களில் திருப்பாச்சிலாச்சிரமம் என்னும் சிவத்தலமும் ஒன்றாகும்.

2. தலமும் இருப்பிடமும்

நீர்வளம், நிலவளம், செல்வ வளம் நிறைந்த சோழவள நாட்டின்கண் காவிரி நதிக்கு வடகரையில் திகழும் தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் 62-வது சிவத்தலம்

திருப்பாச்சிலாச்சிராமம் என்பதாம். இது, தற்போது திருவாசி என வழங்குகிறது. திருப்பாச்சிலாச்சிராமம் என்பதில் திரு+பாச்சில்+ஆச்சிராமம் என்ற மூன்று சொற்கள் உள்ளன. திரு என்பது தெய்வத்தன்மை, அழகு, செல்வம் ஆகும். பாச்சில் என்பது ஊர்ப்பெயர் ஆகும். ஆச்சிராமம் என்பது கோயிலின் பெயர். இஃது ஊர்ப் பெயருடன் வழங்கல் ஆயிற்று ஆதியில் இங்கு வசிஷ்டர், அகஸ்தியர், தூர்வாசர் முதலிய சப்தரிஷிகள் ஆசிரமம் வகித்து இறைவனை வழிபட்டுக்கொண்டு தவம் செய்த இடம் ஆதலால் ஆச்சிராமம் என்ற பெயர் பெறலாயிற்று. மக்கள் ஆளுகைக்கு உட்பட்ட இடம் ஆச்சிராமம் என்றும் கூறுவர்.

சோழ நாட்டிலே தென் கயிலாயமாகிய திருச்சிராப்பள்ளி என்னும் தலத்திற்கு வடக்கில், காவிரியின் கிளையாகிய கொள்ளிட நதியின் வடகரைப் பகுதி முற்காலத்தில் பாச்சில் கூற்றம் என வழங்கியது. இப்பாச்சில் கூற்றம் இருந்த வளநாடு முதலாம் இராசராசன் (கி, பி. 983 – 1014) காலத்தில் வடகரைமேல் மழ நாடாகிய இராசாசிரிய வள நாடு என்ற பெயரையும், முதற் குலோத்துங்கன் (கி. பி. 1070–1120) காலத்தில் தியாகவல்லி வள நாடு என்ற பெயரையும், இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133 – 1150) காலத்தில் தீன சிந்தாமணி வள நாடு என்ற பெயரையும் கொண்டு விளங்கியது எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கிரவர்த்தி சுந்தரபாண்டிய தேவர் (கி. பி. 1216 – 1258) காலத்துக் கல் வெட்டில் பாச்சிலாச்சிராமம் என்பது பாச்சில் திருவாசிரம் எனக் குறிக்கப் பெற்றுள்ளது. திரு ஆச்சிராமம் என்பது திருவாசிரம் என வழங்கிப் பிற்காலத்தில் அதன் ஈற்றிலுள்ள 'ரம்' என்பது போய், திருவாசி என நின்றது என்பது திட்டமாக அறியக் கிடக்கிறது. ஆகவே திருவாச்சிராமம் என்ற கோயிலின் பெயர் திருவாசிரம் என்று ஆகிப் பின்பு திருவாசி என வழங்குகிறது.

திருவாசி என்ற ஊர், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் லால்குடி வட்டத்தைச் சேர்ந்தது. இது, திருச்சிராப்பள்ளியி-லிருந்து வடமேற்கே கொள்ளிட நதியின் வடகரையாக முசிறி, நாமக்கல், சேலம் செல்லும் நெடுவழியில் சுமார் 7½ கல் தொலைவிலும், திருச்சிராப்பள்ளி – விழுப்புரம் குறுக்குப் புகை வண்டிப் பாதையில் ஸ்ரீரங்கத்தை அடுத்த உத்தமர் கோயில் புகை வண்டி நிலையத்திலிருந்து மேற்கே சுமார் 4 கல் தொலைவிலும் உள்ளது. இவ்வூருக்குக் கிழக்கில் கூடப்பள்ளியும், மேற்கில் முசிறி செல்லும் பெருவழியும், அதற்கு அண்மையில் கொள்ளிட நதியும், மேற்கில் தொடையூரும், வடக்கில் பாச்சூரும், அதற்குச் சமீபத்தில் பங்குனி நதியும் உள்ளன.

முசிறி செல்லும் பெருஞ்சாலையின் தென்பகுதியில் திருவாசிக் கிராம தேவதை ஆச்சிராயி அம்மன் கோயில் ஒன்று உள்ளது. திருவாசிக் கிராமம் முழுவதும் ஒரே வீடாகவும்,

அங்கு வாழும் மக்கள் அனைவரும் ஆச்சிராயி அம்மையாரின் பற்றுமிக்க குழந்தைகளாகவும், அக் குழந்தைகளைப் பாதுகாக்கும் பொறுப்பாகவே, கிராமத்தின் நுழைவு இடமாகிய ஐயன் வாய்க்கால் கரையில் திருக்கோயில் கொண்டு கிராமத்தை நோக்கிய வண்ணம் ஆச்சிராயி அம்மன் எழுந்தருளி இருப்பதை அறியலாம் ஆச்சிராயி – இத்தெய்வம், தெய்வத்தாய் ஆகும். (ஆச்சி - தாய் ராயி - பெரியவள் ஆச்சிரமத்தின் + ஆய் = ஆச்சிராயி என்றலுமாம்.) அங்கிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் கிளைவழியில் சென்றால் திருவாசி என்ற ஊரை அடையலாம். ஊரின் இடையில் உயர்ந்த கோபுரமும் மதில் சுவரும் சூழ்ந்த திருக்கோயில் (சிவன் கோயில்) அழகுடன் விளங்குகிறது. ஊரிலும் கோயிலிலும் மின்சார விளக்குகள் போடப்பட்டுள்ளன. ஊருக்கு வெளியில் சுற்றி மாஞ்சோலைகள், தென்னை மரங்கள், நீர் ஓடும் வாய்க்கால்கள், நீர்நிலைகள், விளை நிலங்கள் முதலியன திகழ்கின்றன.

இவ்வூர், திருக்கோயிலை நடுவே பெற்று நான்கு பக்கமும் வீடுகள் சுமார் 85-ம், ஊருக்குக் கீழ்க் கோடியில் வீடுகள் சுமார்

100-ம் உள்ளன. இங்கு உள்ளவர்கள் பெரும்பாலும் உழவுத் தொழிலிலே ஈடுபட்டவர்கள் ஆவர். இவ்வூரிலுள்ள மக்களின் தொகை மொத்தம் சுமார் 2000 என்பர். இங்கு அஞ்சல் நிலையம் (Post Office) ஒன்றும், தமிழ்நாடு அரசாங்க உயர்நிலைப் பள்ளி ஒன்றும் உள்ளன. இப்பள்ளியில் மாணவ மாணவிகள் 1,000 பேர்கள் கல்வி பயில்கின்றனர் இந்தத் திருவாசிக் கிராமம் திருவாசிக் கிராமப் பஞ்சாயத்து ஆகும். மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தின் கிராமாட்சிக்கு உட்பட்டது ஆகும்.

3. திருக்கோயில் அமைப்பு

திருப்பாச்சிலாச்சிராமத்துத் திருக்கோயில் கிராமத்திற்கு நடுவில் மிக அழகுடன் திகழ்கிறது. திருக்கோயிலைச் சூழ்ந்த நான்கு பக்கமும் உயர்ந்த மதில்கள் செவ்விய முறையில் உள்ளன. மதிலின் நீளம், சுமார் கீழ்மேல் அளவு 300 அடிகளும், அகலம் சுமார் தென்வடல் அளவு 168 அடிகளும் அமைந்துள்ளவை. திருக்கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதியை உடையது. தென் வடல் மதில்கள் இணைந்த கிழக்குநோக்கிய பெரிய இராச கோபுரம் ஐந்து மாடிகளுடன் உள்ளது. கோபுரவாசலுக்கு எதிரில் கிழக்கே நான்குகால் மண்டபம் ஒன்று சிறப்புடன் விளங்குகிறது.

முன்பு கிழக்கு நோக்கி நின்ற முதற்கோபுரத்தின் (இராச கோபுரத்தின்) திருவாயிலுள் நுழைந்து ஆலயத்துள் செல்லும் போது மதிலை ஒட்டி ஒரு பிரகாரம் உள்ளது. அஃது இரண்டாம் பிரகாரம் எனப் பெயர் பெறும். மதிலுக்கு வெளியே உள்ள தேரோடும் நான்கு வீதியும் மூன்றாம் பிரகாரம் ஆகும்.

இரண்டாம் பிரகாரத்தின் தென்பகுதியில் கருவூலமும், நிர்வாக அதிகாரியின் அலுவலகமும் உள்ளன. இவற்றை அடுத்துத் தென்பால் அம்மன் திருக்கோயிலும் அதற்கு எதிரில் அன்னமாம் பொய்கை என்ற சிவதீர்த்தமும் தலமரமான வன்னி மரமும் திகழ்கின்றன. தென்மேற்கு மூலையில் செல்வ விநாயகர்

ஆலயம் ஒன்று உள்ளது. இரண்டாம் பிரகாரத்தின் வடகீழ்ப் பகுதியில் பாகசாலை, யாகசாலை, நெற்களஞ்சியம் முதலிய வற்றைக் காணலாம்.

முதற் இராச கோபுரத்திற்கும் இரண்டாம் கோபுரத்திற்கும் இடைவெளியின்றிப் பெரிய மண்டம் (ஆவுடையாப் பிள்ளை மண்டபம்) ஒன்று பற்பல சிற்பத் தூண்களைக் கொண்டு அழகாக உள்ளது. அங்கு இடையில் கொடிமரமும், பலிபீடமும், இடப தேவரும், அவற்றை அடுத்த வடபால் நவக்கிரகமும், சகஸ்ர லிங்கமும் காட்சி அளிக்கின்றன.

இரண்டாம் கோபுரத்தைக் கடந்து சென்றால் முதற்பிரகார மாகும். அதன் தென் கிழக்கில் மடைப்பள்ளியும் கிணறும், தெற்குப்பத்தி மண்டபத்தில் அறுபத்து மூவர் முதலியோர் சந்நிதியும், தென்மேற்கில் கோடி விநாயகர் சந்நிதியும், மேற்கில் சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், திருமால், கஜலட்சுமி சந்நிதிகளும் உள்ளன. வடகிழக்குப் பகுதியில் சந்திரசேகரர் மண்டபம் ஒன்றும் உள்ளது.

முதற்பிரகாரத்தின் முன்னர் இறைவர் சுந்தரமூர்த்தி சுவாமிக்குப் பொற்கிழி அளித்த வாசலையுடைய தபன மண்ட பத்தின் தென்பால் விநாயகரும், வடபால் நடராசரும் உள்ளனர். தபனமண்டபத்தை அடுத்து இடப தேவர் உள்ள மகா மண்டபமும், அதற்கு அடுத்து அர்த்தமண்டபமும், அதனை அடுத்து மூலஸ்தானக் கர்ப்பக்கிரகமும் உள்ளன. கர்ப்பக் கிரகத்தில் ஸ்ரீமாற்றறிவரதேசுவரரைத் தரிசிக்கலாம். பின்பு கர்ப்பக்கிரக வெளித் தென்சுவரில் தட்சிணாமூர்த்தியையும், வெளிக்கர்ப்பக்கிரக மேற்குச் சுவரில் அர்த்தநாரி ஈசுவரரையும், வெளி வடக்குக் கர்ப்பக்கிரகச் சுவரில் கோமுகத்தையும், துர்க்கா தேவியையும், அதனை அடுத்த வடபகுதியில் சண்டிகேசுவரரையும் தரிசிக்கலாம். இவ்வாலய தரிசனம் மனமகிழ்ச்சியையும் மனச் சாந்தியையும் தரவல்லதாம்.

4. திருக்கோயிலின் படம்



பட விளக்கம்

1.	நான்கு கால் மண்டபம்	20.	இரண்டாம் கோபுரம்
2.	இராஜகோபுரம்	21	மடைப்பள்ளி
3.	கருவூலம்	22.	கிணறு
4	தேவஸ்தான அலுவலகம்	23.	கோடி விநாயகர்
5.	சண்டிகேசுவரி அம்மன்	24.	சோமாஸ்கந்தர் சிலை
6	ஸ்ரீபாலசௌந்தரி அம்மன்	25.	சுப்பிரமணியர்
7.	தலவிருட்சம்-வன்னிமரம்	26.	திருமால் மண்டபம்
8.	அன்னமாம் பொய்கை	27.	கஜலட்சுமி
9.	அம்மன் நந்தி	28.	சண்டிகேசுவரர்
10.	செல்வ விநாயகர்	29.	காலைசந்தி உக்கிராணம்
11.	பின்புறவாசல் (சன்னல்)	30.	ஆலய உக்கிராணம்
12.	பாகசாலை	31.	சந்திரசேகரர் மண்டபம்
13.	யாகசாலை	32.	விருதுகள் அறை
14.	நெற்களஞ்சியம்	33.	சுவாமிகோயில் வாசல்
15.	கொடிமரம்	34.	தபனமண்டப விநாயகர்
16.	பலிபீடம்	35.	நடராசர்
17.	திருநந்தி	36.	மகாமண்டப நந்தி
18.	நவக்கிரகங்கள்	37.	மூலஸ்தானம்
19.	சகஸ்ரலிங்கம்	38.	தெட்கிணாமூர்த்தி

5. தல விருட்சம்

இத்தலத்துத் தலவிருட்சம் (மரம்) வன்னி மரம் ஆகும் இங்கு வன்னிமரம் மிகுதியாக இருந்தமையால் இத்தலம் வனக்ஷேத்திரம் எனப் பெயர் பெறும் (சமீ வன்னி மரம் வனம் – காடு) தற்போது இத்தலத்துள் ஒரு வன்னி மரம் மட்டும், அம்மையார் ஆலயத்தின் முன்னே அன்னமாம் பொய்கைக் கரையின் அருகு தழைத்து விளங்குகிறது. இவ்வன்னி மரத்தின் அடிப்பாகம் பிரமன் வடிவம், மத்தியபாகம் விஷ்ணு வடிவம், கிளைகள் உருத்திர மூர்த்தி வடிவம் ஆகும். ஆகவே இவ்வன்னி மரம் திரிமூர்த்தி வடிவம் (சிவலிங்க வடிவம்) உடையது. இதனை வழிபட்டோர், இதன் பத்திரத்தை (இலையை) இறைவர்க்குச் சாத்திப் பூசித்தோர் விரும்பிய வரங்களைப் பெறுவர் என நூல்கள் கூறும்.

6. மூர்த்தியின் பெயர்

இங்குத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய மூலஸ்தான சிவலிங்கப் பெருமானுக்குச் சமீவனேசுவரர், பிரமபுரீசுவரர், மாற்றறிவரதீசுவரர்* முதலிய பல திரு நாமங்கள் வழங்குகின்றன. வன்னிமரம் சூழ்ந்திருந்த காரணத்தால் சமீவனேசுவரர் என்றும், பிரமதேவன் பூசித்த காரணத்தால் பிரமபுரீசுவரர் என்றும், சுந்தரமூர்த்தி நாயனார் தாம் பெற்ற பொன் மாற்றுக் குறைவதால் அதனை உரை கல்லில் மாற்றுரைத்துக் காட்ட, அதனை இறைவர் அறிந்த காரணத்தால் மாற்றறிவரதீசுவரர் என்றும் இறைவர்க்குப் பெயர்கள் ஏற்பட்டுள்ளன.

அன்றியும் இத்தலத்துப் பெருமானுக்குப் பாச்சில் திருவாச்சிராமத்துத் தேவர் எனவும், பாச்சில் திருவாச்சிராமத்துப் பெருமான் அடிகள் எனவும், பாச்சில் திருவாச்சிராமமுடைய மகாதேவர் எனவும், திருவாச்சிராமம் உடையார் எனவும், திருவாச்சிராமத் தேவர் எனவும், திருவாசிரம் உடைய நாயனார் எனவும் பல திருப்பெயர்கள் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றுள்ளன.

அம்மையின் திருநாமங்கள், பாலசௌந்தரி எனவும் பாலாம்பிகை எனவும் வழங்கப்பெறுகின்றன. அம்மையார் மிகுந்த சக்தி வாய்ந்தவர் ; சிறந்த அம்மையார் சந்நிதி ஆகும்.

இங்கு இறைவனையும் இறைவியையும் காலை நடுப்பகல் மாலை தரிசிக்கின் மிகுந்த பயன் அளிக்கும். இதனை

'' காலைதொழ அற்றைவினை கட்டகலும் ; கட்டுச்சி
வேலை தொழ இப்பிறப்பில் வெந்துயர்போல் ; — மாலையில்
வந்து சிவன் தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயரம் எல்லாம் விடும் ''.

எனவரும் சிவதரிசன மகத்துவம் என்ற நூலால் அறிக.

---

* இந்த மாற்றறிவரதீசுவரர் என்ற பெயர் மாறி, மாற்றுரைவரதீசுவரர் எனத் தற்பொழுது வழங்கி வருகிறது. இறைவனே உரைகல்லில் பொன்னை மாற்றுரைத்துச் சுந்தரர்க்குக் காட்டினார். அதனால், இறைவர் மாற்றுரை வரதீசுவரர் எனப் பெற்றார் என்று சொல்கின்ற வழக்கத்திலும் அரசாங்கப் பதிவிலும் இருந்து வருகிறது.

7. தீர்த்தங்கள்

இப்பதியில் திகழும் புண்ணிய தீர்த்தங்கள் அன்னமாம் பொய்கை, சிலம்பு நதி, கொள்ளிடம் (வடகாவிரி) என்பனவாம். தீர்த்தம் என்பது தன்னிடத்தே வந்து மூழ்குவோரின் பாவங்களைப் போக்கித் தூய்மை செய்வதாம். இறைவனுக்குத் தீர்த்தன் என்ற ஒரு திருப்பெயர் உள்ளது: ''ஆர்த்தபிறவித் துயர்கெட நாம் ஆர்த்ததாடும் தீர்த்தன்'' எனத் திருவாசகத்தில் வருவது அறிக. இறைவன் தீர்த்தங்களாகவும் விளங்குகிறான்; ''சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே'' என்பது அப்பர் தேவாரம்.

1. **அன்னமாம் பொய்கை:** இச் சிவ தீர்த்தம் அம்மன் கோயிலுக்கு முன்னர் உள்ளது. இதனைத் தாமிரபரணி எனவும் கூறுவர். பொய்கை என்பது தானே தோன்றிய நீர் நிலை ஆகும், உமாதேவியார் இங்கு அன்னப் பறவை வடிவுடன் இருந்து நீராடி இறைவனை வழிபட்டதால் இத்தீர்த்தம் அன்னமாம் பொய்கை எனப் பெயர் பெற்றது. இதனைத் திருநாவுக்கரசு சுவாமிகள் திருநாகைக்கா ரோணப் பதிகத்தில் 4-வது திருப்பாடலில், ''அன்னமாம் பொய்கை சூழ் அம்பரானை ஆச்சிரா மந்நகரும் ஆனைக்காவும்'' என்று பாடியுள்ளார். இப் பொய்கையில் நீராடி இறைவனை வழிபடுவோர்க்குப் பல பிணிகள் நீங்கும்; இஷ்ட சித்திகள் சித்திக்கும் இஃது ஆன்றோர் அறிந்த செய்தியாம். அன்றியும் இப்பொய்கைக் கரையில் பிரமதேவர் தவம் இருந்து இறைவனைப் பூசித்ததால் இப் பொய்கை, பிரமதீர்த்தம் எனவும் பெயர் பெறும்.

2. **சிலம்பு நதி:** இஃது ஊருக்கு வடக்கே சுமார் இரண்டு பர்லாங்கில் கிழக்கு நோக்கி ஓடும் பங்குனி நதி ஆகும். இந்நதி, என்றும் நீர்வற்றாமல் ஓடும் சீவ நதியாம்; பார்வதி தேவியின் அம்சமான அமலையின் அதாவது கமலன் என்னும் வைசியனது மகளின் காற் சிலம்பினால் இந் நதி தோன்றியதால் சிலம்பு நதி எனவும், அமலை நதி எனவும் பெயர் பெற்றது. இதில் நீராடி இறைவனை வழிபடுவோர்க்குச் சகல செல்வங்களும் சித்திக்கும்

என்று சொல்லப் படுகிறது அமலையின் திருமண நிகழ்ச்சி பங்குனி மாதத்தில் நிகழ்ந்ததால், சிலம்பினால் தோன்றிய இந்நதி பங்குனி நதி எனவும் பெயர் பெற்றது என்பர்.

3. கொள்ளிட நதி: இஃது ஊருக்குத் தெற்கே முசிறி செல்லும் பெருஞ்சாலையினை அடுத்துத் தென்பால் காவிரியின் பிரிவாக ஓடும் பெரிய நதி ஆகும்; இது காவிரிக்கு ஒப்பாகும் காவிரி ஆற்றில் பருவகாலத்து நீர். பெருகி வெள்ளம் தோன்றும்போது இந்தக் கொள்ளிட நதியில் நீரைத் திருப்பப்படும். அந்த நீர் அனைத்தும் இதில் கொள்ளும் சக்தியைப் பெற்றதால் கொள்ளிடம் எனப் பெயர் பெறும் என்பர். இதில் தைபூசம் முதலிய புண்ணிய காலங்களில் ஸ்ரீமாற்றறிவரதீசுவரர்க்குத் தீர்த்தவாரி நடைபெறும். அதுபோது மக்களும் நீராடி இறைவனை வழிபடுகின்றனர். இந்த நதியின் ஸ்நானம் இஷ்ட சித்திகளை அளிக்க வல்லதாம்.

8. தலப் பெருமை

திருப்பாச்சிலாச்சிராமமாகிய இச் சிவத்தலம், மிகப் பழமை வாய்ந்தது; சோலைகள நிறைந்தது; பல முனிவர்கள் வாசம் செய்தது; எங்கும் வற்றா நீர் ஊற்றினை உடையது; பல சிவ தீர்த்தங்களைத் தன்னிடத்தே கொண்டது; வன்னிமரத்தைத் தலமரமாகக் கொண்டு சமீவனம் எனப் பெயர்பெற்றது உமாதேவியார், பிரமதேவன் அகத்திய முனிவர் முதலியோர் பூசித்துப் பேறு பெற்றது. கொல்லிமழவன் புதல்விக்குற்ற முயலகன் என்ற கொடிய நோய் திருஞான சம்பந்தரால் பாமாலை இறைவருக்கு பாடப் பெற்றதால் நீங்கியது; சுந்தரர்க்குப் பொற்கிழி அளிக்கப்பெற்றது. சிவபெருமான் கமலன் என்னும் ஒரு வைசியனின் புதல்வியைக் காந்தர்வமணம் (திருமணம்) செய்துகொண்ட சிறப்புடையது; ஹொய்சல் சோழ, பாண்டியர், நாயக்கர் முதலிய மாமன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டு ஆதரவும் பெற்றது; திருஞான சம்பந்தர், சுந்தரர், ஐயடிகள் காடவர்கோன் ஆகியோர்களால்

பாடல்களைப் பெற்றது; பல அரிய கல்வெட்டுக்களைத் தன்னகத்தே கொண்டு இருப்பது.

9 வழிபட்டோர்

இத்தலத்துப் பெருமானை உமாதேவியார், பிரமதேவன், இலக்குமி, அகத்திய முனிவர், கமலன் என்னும் வைசியன், கொல்லிமழவன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர் ஐயடிகள் காடவர்கோன் நாயனார், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் தரிசித்து வழிபட்டுப் பாடல்கள் பாடியுள்ளனர். பராந்தக சோழன், முதலாம் இராசராசன், முதற்குலோத்துங்கன், மூன்றாம்குலோத்துங்கன். சுந்தரபாண்டியன். விசயநகர வேந்தரான கிருஷ்ணதேவராயர், ஹொய்சல மன்னன் ஆகியோர் வழிபட்டுத் திருப்பணிகள் செய்து சிறப்பித்தனர்.

முதலாம் இராசராசன் தான் வழிபட்டதற்கு அறிகுறியாக இந்த இராசராச விடங்கர் என்ற ஒரு சிவலிங்க மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்ததாகக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

10 சுற்றுக் கோயில்கள்

இத்தலத்து ஆலயத்தின் முன்னே அடைக்கலம்கசத்தான் என்ற காவல் தெய்வக் கோயிலும் அதற்குக் கீழ்பால் அடுத்தாற் போல் தேரடிக்கருப்பு, மதுரைவீரன் என்ற ஊர்க்காவல் தெய்வக் கோயில்களும் ஊருக்குத் தென்பால் முசிறி செல்லும் பெரு வழியினை அடுத்து ஆச்சிராயி என்ற ஊர்க்காவல் தெய்வக் கோயிலும், விளங்கவந்தாள் என்ற அம்மையார் கோயிலும் உள்ளன,

அடைக்கலம் கரத்தான் வரலாறு: ஒரு காலத்தில் சேர நாட்டில் வாழ்ந்து வந்த ஒரு அந்தணன் அதர்வண வேதமாகிய மந்திர சாஸ்திரத்தில் வல்லவனாகிப் பெரிய மந்திரவாதி என்ற பெயர் பெற்று விளங்கினான். அவன் தலயாத்திரையாக இத் திருவாசித் தலத்திற்கு வந்து இறைவனையும் இறைவியையும்

வழிபட்டான் : பாலசௌந்தரி தேவியின் மூர்த்தி கரத்தினைக் கண்டான் ; இத்தேவியைச் சக்தியுடன் தனது நாட்டிற்கு மந்திர வல்லமையால் கொண்டு போகக்கருதினான் ; உடனே ஒரு தனியிடத்தில் சென்று மறைவாக இருந்து சக்தியின் மந்திரத்தை அகோரமாகச் செபிக்கலான். அம்மந்திரம் அவனுக்கு விரைந்து பயன் தரவில்லை. உடனே மந்திரவாதி எழுந்து சென்று அம்மையின் சந்நிதிமுன்உள்ள அன்னமாம் பொய்கையில் இறங்கி ஆசமித்துச் செபஞ் செய்யக் கருதினான். (ஆசமனம் — மந்திரத்தால் நீரை உட்கொள்ளல்) ஆசமித்தபோது அவன் வாயிலிருந்த பற்கள் அனைத்தும் உடனே விழுந்துவிட்டன. அதனால் அவன் சிறிதும் மனம் தளராமல் மீண்டும் நீரில் நின்று கொண்டு சக்தி மந்திரத்தை அகோரமாகச் செபம் செய்யலானான்.

அப்போது இறைவியாகிய பாலசௌந்தரி தேவி, அவனது செயலுக்கு வெறுத்து, அவன் உடலுக்குப் பற்பல துன்பங்களை நிகழ்த்தினாள், மந்திரவாதி தனக்கு ஏற்பட்ட துன்பங்களைத் தாங்க முடியாமல் உடனே அம்மையார் சந்நிதியின் முன் ஓடி நின்று " அம்மையே! உன் திருவடிகளுக்குச் சரணம்! சரணம்!!" என்று கதறிப் பலவாறு துதித்துத் தன் பிழையினைப் பொறுத்தருள வேண்டி வணங்கினான் உடனே அம்மையார் அவன் மீது கருணைபாலித்து அவனது பிழைகளைப் பொறுத்தருள, அப்போது மந்திரவாதி " அம்மையே! நான் என்றும் உன் தொண்டனாக இருக்க அருள் செய்வாயாக" என்று வேண்டினாள். அதற்கு அம்மையார் அவனை நோக்கி, " நீ இவ்வாலயத்தின் வெளிவாசல் முன்னே காவல் தெய்வமாகி நிற்பாயாக ! என்றும் ஒவ்வொரு கால பூசை முடிவில் உனக்கு நைவேத்தியமும் அர்த்தசாம பூசையின் போது முதல் பூசையும் உரியனவாகுக ; பின்னரே அர்த்த சாம பூசை எனக்கும், பிறகு சுவாமிக்கும் அதன் பிறகு பரிவாரங்களுக்கும் ஆகட்டும் " என்று அருள் புரிந்தாள்.

பின்னர் மந்திரவாதி ஆவயத்தின் வெளியே வந்ததும் முன்னிடத்தில், கோயில் காவல் தெய்வமாக ஆகி நின்றான் ;

அன்னை இறைவி அடைக்கலங் காத்து அருளியது போலவே, தன்னை அடைக்கலமாக வந்தடைந்து வேண்டிய மக்களின் குறைகளைப் போக்கிக் காத்து வருவதால் மந்திரவாதி ''அடைக்கலம் காத்தான்'' என்ற பெயருடன் சக்தி வாய்ந்த தெய்வமாக விளங்கி வருகின்றான். இத்தெய்வம் வலக்கையை உயர்த்தி மோதிரத்துடன் கூடிய சுட்டுவிரலை* நீட்டிக் கொண்டு, இடக்கையில் சுக்குமாந் தடியுடன் நிற்கும் கோலம் மிகுந்த சக்தியைக் காட்டுகிறது. இன்றும் அம்மையார் அடைக்கலங் காத்தானுக்கு அருளியவாறு நாடோறும் ஆலய பூசை முடிவில் நைவேத்தியமும், அர்த்தசாம பூசை முன் பூசையும் நடைபெற்று வருகின்றன.

தேரடிக் கருப்பு, மதுரை வீரன்: இவ்விரண்டு தெய்வமும் அடைக்கலம் காத்தான் கோயிலுக்குக் கீழ்பால் தெற்கு நோக்கி உள்ளன. இத்தெய்வம் இரண்டும் கிராம தேவதை, இவற்றிற்கு ஆலய பூசை, நைவேத்தியம் ஒன்றும் இல்லை. கிராமத்தாரால் உற்சவம் நடத்தப்பட்டு வந்ததாகக் கூறுவர். தற்போது உற்சவம் இல்லை.

ஆச்சிராயி அம்மன்: இந்த அம்மன் திருவாசிக் கிராம தேவதை. ஆச்சிராமத்தின்+ஆய் = ஆச்சிராயி. ஆய்—தாய்: தெய்வம். இது மிகச் சக்திவாய்ந்த தெய்வமாக மக்களைப் பாதுகாத்து விளங்கி வருவது என்பர்.

விளங்கவந்தான்: இக்கோயில் பிடாரி கோயிலுக்கு வட புறம் உள்ளது ஆச்சிராயிக்கு விழா நடைபெறும்போது விளங்கவந்தானுக்கும் சேர்ந்து விழா நடைபெறும்.

11. பூசையும் திருவிழாவும்

[சிவாலயங்களில் நாடோறும் காலை, மாலையில் செய்யும் பூசை நித்திய பூசை எனவும், விசேட புண்ணிய காலங்களில்

---

* வலக்கைச் சுட்டு விரலை நீட்டிக் காட்டுதல் ஒரு கட்டளை—அதாவது உத்திரவைப் பிறப்பிக்கும் அடையாளம் ஆகும். சுடடு விரலை நீட்டிக் காட்டுதல் தர்ச்சனி முத்திரை ஆகும்.

செய்யும் பூசை விசேட நாள் பூசை (நைமித்திக பூசை எனவும் இருவகைப்படும்.

திருவிழா விசேட நாள் விழா, பெருவிழா (பிரம்மோற்சவம்) என இருவகைப்படும்.

1. நித்திய பூசை :

இத்திருக் கோயிலில் உள்ள மூர்த்திகளுக்கு நாடோறும் காலசந்தி, உச்சிக் காலம், சாயரட்சை, அர்த்த சாமம் என்ற நான்கு காலங்களும் சிவாகம முறைப்படி நித்திய பூசைகள் நடைபெறுகின்றன.

இத்திருக்கோயிலுக்கு நாடோறும் கால சந்தி நடப்பதற்கு முன் பரிசாரகரால் திருமஞ்சனம் காலை 7 மணிக்கு ஐயன் வாய்க்காலிலிருந்து சகல மேளவாத்தியச் சிறப்புடன் ஆலயத்தின் வலமாகக் கொண்டு வரப்பெறும்.

பொதுவாகக் கொண்டு வரும் திருமஞ்சனத்தை நாடோறும் மூலலிங்கத்தினடி, அல்லது பலி பீடம், இடபம், துவஜஸ்தம்பம் (கொடிமரம்), உள்கோபுர வாயிற்படி இவற்றில் ஏதேனும் ஒன்றில் செலவிடுவர். பின்பு இறைவர்க்கு நீராட்டுவர் திருமஞ்சனம் வருதலால் கிராமத்திற்கும் அரசாங்கத்திற்கும். விருத்தியாவதுடன் இலட்சுமி கடாட்சமும் உண்டாகும் எக்காரியங்களும் சித்திக்கும் என்று நூல் கூறும்

முதல் நாள் அர்த்தசாம பூசை முடிவில் பள்ளியறைக்குச் சென்ற இறைவனின் திருமுடியிலுள்ள கங்காதேவி, அங்குள்ள மனோன்மணி சக்தியைக் கண்டு, உடனே அங்கு நின்றும் சென்று நதியில் கலந்துவிடுகிறாள் என்பது ஐதீகம் பிறகு அக்கங்கையைக் காலையில் சகல வாத்திய முழக்கங்களுடனும் சகல உபசாரத் துடனும் ஆலயத்திற்கு அழைத்து வருவதே திருமஞ்சனம் கொண்டு வருதலின் ஐதிகம் என்க.

இத்திருக்கோயிலில் நாடோறும் காலசந்தி பூசை காலை 8 மணிக்குமேல் 9 மணிக்குள்ளும், உச்சிக்கால பூசை

பகல் 11 மணிக்கு மேல் 12 மணிக்குள்ளும், சாயரட்சை பூசை மாலை 5 மணிக்குமேல் 6 மணிக்குள்ளும், அர்த்தசாம பூசை இரவு 7–30 மணிக்குமேல் 8 மணிக்குள்ளும் நடைபெறும்.

இங்குக் காலசந்தி பூசை மட்டும் கட்டளைதார்கள் நடத்துகின்றார்கள்.

ஆடிமாதம் முதல் புரட்டாசி மாதம் முடிய மூன்று மாதங்களின் காலசந்தி பூசை மண்ணச்சநல்லூர் திரு குருசாமிப் பிள்ளை அவர்கள் குடும்பத்தினர் (தற்போது கு. ஜெயபால் பிள்ளை) கட்டளையாகவும், ஐப்பசி மாதம் முதல் ஆனி மாதம் முடிய ஒன்பது மாதங்களின் காலசந்தி பூசை, மண்ணச்சநல்லூர் திரு. M. A திருநாவுக்கரசு பிள்ளை அவர்கள் குடும்பத்தினரின் கட்டளையாகவும் நடைபெற்று வருகின்றது.

மற்றைய காலங்களின் பூசைகள் தேவஸ்தானத்தாரால் நடத்தப்பெற்று வருகின்றன.

2. விசேட நாள் பூசை

1. **விநாயகர் சதுர்த்தி :** ஆவணி மாதம் வளர்பிறைச் சதுர்த்தியில் விநாயகக் கடவுளுக்கு விசேட பூசை நடைபெறும். இது தேவஸ்தானத்தாரால் நடத்தப்பெறுகிறது.

2. **கந்தர் சஷ்டி :** ஐப்பசி மாதம் வளர்பிறைச் சஷ்டிக்கு முன் ஐந்து நாள் முருகக் கடவுளுக்கு விசேட பூசை தேவஸ்தானத்தாரால் நடத்தப்பெறுகிறது. ஆறாவது நாள் சஷ்டி அன்று கட்டளைதார், திருவாசி M. சுந்தரம் பிள்ளை அவர்களால் விசேட அபிஷேகமும் பூசையும் வீதிவலமும் நடத்தப்பெறுகின்றன.

3. **கார்த்திகைச் சோமவாரம் :** கார்த்திகை மாதம் வரும் ஒவ்வொரு சோமவாரத்தில் (திங்கட்கிழமையில்) மாலையில் சுவாமி, அம்மன் முதலியோருக்கு விசேட அபிஷேகம், பூசை முதலியன சிறப்பாக நடைபெறும்.

முதல் சோமவாரம் கட்டளை, காலசந்தி கட்டளைதார் மண்ணச்சநல்லூர் திரு. M. A. திருநாவுக்கரசு பிள்ளை அவர்களும், இரண்டாம் சோமவாரம் கட்டளை, திருவாசி திரு. T. K. ஆறுமுகம் பிள்ளை, திரு. T. M. சுந்தரம் பிள்ளை ஆகிய இருவர்களும், மூன்றாம் சோமவாரம் கட்டளை உறையூர் உயர்திரு மு. ஆ. அருணாசல முதலியார் அவர்களும், நான்காம் சோமவாரம் கட்டளை, திருச்சி ஆண்டார் வீதி டாக்டர் திரு S. பஞ்சநத சர்மா குமாரர் திரு. S. முரளிதரன் அவர்களும் செய்து வருகின்றார்கள்.

4. **கார்த்திகைத் தீபம் :** கார்த்திகை மாதம் கிருத்திகை நாளில் மாலையில் சுவாமிக்கு விசேட அபிஷேகம், புஷ்ப அலங்காரம், பூசை, தீபம், சொக்கப்பனை கொளுத்துதல், முதலியன நடைபெறும். (அப்போது சுவாமியை வீதிவலம் எழுந்தருளச் செய்யப்படும். இந்த உத்சவமும் தேவஸ்தானத்தாரால் நடத்தப்பெறுகிறது).

5. **சிவராத்திரி :** மாசிமாதம் கிருஷ்ணபட்சம் சிவராத்திரி அன்று சுவாமி, அம்மன் முதலியோர்க்கு விசேட அபிஷேகம் பூசை முதலியன இரவு நான்கு காலமும் சிறப்பாக நடைபெறும். நான்கு காலமும் உபயதார்களால் செம்மையாக நடத்தப் பெறுகின்றன.

6. **பங்குனி உத்திரம் :** பங்குனி மாதம் உத்திர நாளில் சுவாமி, அம்மன் முதலியோர்க்கு விசேட அபிஷேகம் பூசை முதலியன நடைபெறும். மூலஸ்தான அபிஷேகம் மட்டும் திரு. T. R. கலியாணசுந்தரம் பிள்ளை, திரு. T. M. சுந்தரம் பிள்ளை ஆகிய இருவர்களாலும், மற்றவை தேவஸ்தானத்தாரால் நடத்தப்பெறுகின்றன.

7. **ஆருத்திரா அபிஷேகம் :** மார்கழி மாதம் திருவாதிரை நாளில் நடராசப் பெருமானுக்கும் சிவகாமியம்மையாருக்கும் விசேட அபிஷேகாதிகள் நடைபெறும்.

நடராசப்பெருமானுக்கு மார்கழித் திருவாதிரை அபிஷேகமே அன்றி, இன்னும் சித்திரைத் திருவோணம், ஆனி உத்திரம், ஆவணி, புரட்டாசி, மாசி இம்மூன்று மாதங்களில் வளர்பிறைச் சதுர்த்தசி ஆகிய ஐந்துமுறை விசேட அபிஷேகம், பூசை முதலியனவும் நடைபெறும். இவை திருவாசி திரு. T. K. ஆறுமுகம் பிள்ளை அவர்களால் நடத்தப்பெறுகின்றன.

8. ஆடி வெள்ளிக்கிழமைகள் : ஆடிமாதம் வரும் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளில் அம்மனுக்கு விசேட அபிஷேகம் அலங்காரம், பூசை முதலியன நடைபெறும். இரவு அம்மன் புறப்பட்டு உட்பிரகாரத்திலேயே வலம்வரும். இது தேவஸ்தானத்தாரால் நடத்தப்பெறுகிறது.

9. ஆடிப்பூரம்: ஆடிமாதம் பூரநாளில் அம்மனுக்கு விசேட அபிஷேகாதிகள் பூசை முதலியன நடைபெறும். இது கூடப்பள்ளி பண்ணையார் உபயமாக திருமதி செல்லமணி அம்மாள் அவர்களால் நடத்தப்படுகிறது.

10 நவராத்திரி: புரட்டாசி மாதம் நவராத்திரி ஒன்பது நாள் இரவும் அம்மனுக்கு விசேட அபிஷேகம், அலங்காரம், பூசை முதலியன சிறப்பாக நடைபெறும். இது தேவஸ்தானத்தாரால் நடத்தப்பெறுகிறது.

11. பிரதோஷம்: ஒவ்வொரு மாதமும் வரும் அமாவாசை, பௌர்ணமிகளுக்கு முன் திரயோதசி மாலைக் காலத்தில் சுவாமி, இடபதேவர் இவர்களுக்கு விசேட பூசை நடைபெறும். (பிறகு இடப வாகனத்தில் பிரதோஷ நாயகர் (சந்திரசேகரர்) எழுந்தருளி ஆலயத்துள்ளேயே வலம் வருவார்.

12. தனுர் மாத பூசை: தனுர் மாதமாகிய மார்கழி மாதம் ஒவ்வொரு நாள் விடியற்காலம் 5–00 மணிக்குள் சுவாமி அம்மன் பரிவாரங்கள் முதலியோர்க்கு அபிஷேகம் பூசைகள் முதலியன நடைபெறும். இப்பூசை திருப்பள்ளியெழுச்சி எனப் பெயர் பெறும். இது தேவஸ்தானத்தாரால் நடத்தப் பெறுகிறது. (விடியற் காலையில் ஆலயத்தில் திருப்பள்ளியெழுச்சி, தேவாரம் முதலிய அருட்பாடல்களின் இசைத்தட்டுகள் வைத்து ஒலிபரப்பப்படு கின்றன.)

1. விசேட நாள் விழா

1. **விநாயக சதுர்த்தி விழா:** ஆவணி மாதம் வளர்பிறைச் சதுர்த்தியில் விநாயகர் மாலையில் வீதிக்குச் சிறப்புடன் எழுந்தருளுவர். இது தேவஸ்தானத்தாரால் நடத்தப் பெறுகிறது

2. **விசயதசமி விழா:** புரட்டாசி மாதம் நவராத்திரி விழா முடிந்த மறுதினம் தசமி திதியில் அம்புபோடும் உற்சவம் நடைபெறும். அப்போது, சுவாமி குதிரை வாகனத்தில் எழுந்தருளி, அம்பு போட்டுச் சிறப்புடன் வீதிவலம் வருவர். இது, மண்ணச்சநல்லூர் காலைசந்திக் கட்டளைதார் திரு. குருசாமி பிள்ளை வகையறாவால் (தற்காலம் திரு. கு. ஜெயபால் பிள்ளை அவர்களால்) நடத்தப்பெறுகிறது.

3. **கந்தர்சஷ்டி விழா:** ஐப்பசி மாதம் வளர்பிறைச் சஷ்டி அன்று மாலை முருகக் கடவுள் அலங்காரச் சிறப்போடு எழுந்தருளி வெளிவந்து. சூரசம்ஹாரம் நடைபெற்று வீதி வலம் வருவர் இது திருவாசி உயர் திரு T. M. சுந்தரம்பிள்ளை வகையறாவால் நடத்தப்பெற்று வருவது.

4 **கார்த்திகைத் தீப விழா:** கார்த்திகை மாதம் பௌர்ணமி திதி, கார்த்திகை நாள் அன்று மாலையில் சோமாஸ்கந்தர் அலங்காரச் சிறப்புடன் எழுந்தருளிச் சொக்கப்பனை கொளுத்துதல் நடைபெற்றதும் வீதி வலம் வருவர். இது தேவஸ்தானத்தாரால் நடத்தப் பெறுகிறது.

5. **ஆருத்திரா தரிசன விழா:** மார்கழித் திருவாதிரை அன்று நடராசப் பெருமானும் சிவகாமி அம்மையாரும் காலை சுமார் 10–30 மணிக்குச் சிறப்புடன் எழுந்தருளித் தரிசனம் நடைபெறும், பிறகு சுவாமி, அம்மன் தனித்தனி இரதத்தில் எழுந்தருளி வீதிவலம் வருவர், இது கோவத்தகுடி திரு. H. தாண்டவராயப் பிள்ளை அவர்கள் குடும்பத்தாராலும் திருவாசி திரு. T. R கலியாணசுந்தரம் பிள்ளை அவர்கள் குடும்பக் கட்டளை உபயத்தாலும் திரு. T. M. சுந்தரம் பிள்ளை அவர்களாலும் நடத்தப் பெறுவது.

6. மகா வியதிபாதம்: மார்கழி மாதத்தில் வரும் வியதிபாத யோகத்தன்று, மூலஸ்தானத்திற்கும் சந்திரசேகரர்க்கும் விசேட அபிஷேக ஆராதனை நடைபெறும். சந்திரசேகர் வீதி வலம் வருவர். இது சீப்பாளாப்புத்தூர் திரு. சின்னசாமிப் பிள்ளை அவர்களால் கட்டளையைக்கொண்டு நடத்தப்பெறுகிறது

7. தைப்பூச விழா: இத்தலத்தில் நடைபெறும் விழாக்களில் தை மாதம் பூச நாளில் நடைபெறும் தைப்பூச விழா மிகச் சிறந்த ஒரு விழா ஆகும். இஃது ஒவ்வொரு ஆண்டும் தைமாதம் பௌர்ணமி பூச நட்சத்திரம் கூடிய நாளில் அதிகாலையில் அம்மையாரோடு எழுந்தருளிய சந்திரசேகர மூர்த்திக்கு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை முதலியன செய்வித்து, முத்துப் பல்லக்கில் எழுந்தருளச் செய்து மேளவாத்திய சிறப்புடன் காலை சுமார் 10 மணிக்கு ஆலயத்திலிருந்து புறப்பாடு செய்து, திருவாசிக்கு மேற்கே ஒரு கல்தொலைவில் உள்ள தொடையூருக்கு எடுத்துச் செல்வர்.

பிறகு, தொடையூரிலுள்ள முக்கியமான வீதிகளில் சுவாமி எழுந்தருளிய பின்பு, பகல் சுமார் 12 மணி அளவில் ஊருக்குத் தென்பகுதியில் ஐயன்வாய்க்கால் கரையில் திருச்சிராப்பள்ளி — முசிறி செல்லும் சாலையின் வடபுறம் உள்ள தென்னஞ் சோலையில் அமைக்கப்பெற்ற அலங்காரப் பந்தலில் வந்து எழுந்தருளுவர். அப்போது திருப்பைஞ்ஞீலி ஸ்ரீ விசாலாட்சி அம்மையார் சமேத ஸ்ரீ நீலகண்டேசுவரரும், கூடப்பள்ளி ஸ்ரீ விசாலாட்சியம்மை சமேத ஸ்ரீ விசுவநாதரும், பாச்சூர் ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியும், பாண்டிபுரம் ஸ்ரீ விநாயகக் கடவுளும், சிலையாத்தி ஸ்ரீ மாரியம்மனும் ஆகிய சுவாமிகள் அலங்காரப் பந்தலில் வந்து எழுந்தருளுவர். அதுபோது தொடையூர் திரு. க. வீரப்பிள்ளை அவர்கள் கட்டளையாக எல்லா சுவாமிகளுக்கும் மண்டகபடி செய்கிறார். அதன் பிறகு, எல்லாச் சுவாமிகளுக்கும் ஏக காலத்தில் தீபாராதனை முதலியன மிகச் சிறப்பாக நடைபெறும். பின்னர் அந்தந்த உபயதாரர்கள் பக்தர்கள் முதலியோர்களுக்கு நைவேத்திய பிரசாதங்கள் வழங்குவர்.

அதன் பின்னர், மாலை சுமார் 5 மணிக்கு எல்லா ஊர் சுவாமிகளும் ஏக காலத்தில் புறப்பட்டு எதிரே அருகிலுள்ள கொள்ளிட நதியினை அடைந்து, தீர்த்தவாரி எல்லா சுவாமிகளுக்கும் ஒரே காலத்தில் நடைபெறும். பின்பு, அங்கு அமைக்கப்பெற்ற அழகிய பந்தலில் எல்லா சுவாமிகளையும் எழுந்தருளச் செய்து அபிஷேகம் அலங்காரம் முதலியன சிறப்புடன் செய்து, இரவு சுமார் 9 மணிக்குத் தீபாராதனை நடைபெறும். தீபாராதனை முடிந்ததும் மரியாதைகள் வழங்கியபின் பிரசாத விநியோகங்கள் அந்தந்த மண்டகபடி-தாரர்கள் வழங்குவார்கள்.

கொள்ளிட நதியில் அன்று இரவு முழுவதும் இசைக் கலைகளும், பாட்டுக் கச்சேரிகளும், மேளவாத்தியங்களும் சிறப்பாக நடைபெறும். (அங்குத் தீபாலங்காரங்கள் மனத்திற்கு மகிழ்ச்சியை ஊட்டி நிற்கும். வேடிக்கை விநோதங்கள், தின்பண்டக் கடைகள், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருள்கள் விற்கும் கடைகள் அங்கு அமைந்து சிறப்பிக்கும்.) பல கிராம மக்கள் சுவாமி வழிபாடு செய்யத் திரள் திரளாக வந்து கூடுவர். மறுநாள் விடியற்காலை சுமார் 4 மணி அளவில் எல்லா சுவாமிகளும் தொடையூர் தென்னஞ் சோலைப் பந்தலுக்கு எழுந்தருளுவர். அங்கு எல்லா சுவாமிகளுக்கும் ஏக காலத்தில் சந்திப்புத் தீபாராதனை நடைபெற்று அந்தந்த ஊர் சுவாமிகள் தத்தம் திருக்கோயிலுக்கு எழுந்தருளிச் செல்வர்.

திருவாசி ஸ்ரீ பாலாம்பிகை சமேத ஸ்ரீ மாற்றறிவரதேசுவரர் முத்துப் பல்லக்கில் எழுந்தருளித் திருவாசித் திருக்கோயிலுக்கு வந்தடைவர். இந்தத் தைப்பூச உற்சவம் ஆண்டுதோறும் மிகச் சிறந்த உபயம் ஆகத் திருவாசி திரு. T. M. சுந்தரம் பிள்ளை அவர்களால் நடத்தப்பெற்று வருகிறது.

2. பெருவிழா : (பிரமோற்சவம்)

இவ்வாலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் பிரமோற்சவத்திற்கு, வைகாசி மாதம் பௌர்ணமியை முடிவாகக் கொண்டு புனர்ப்பூச

நாளில் கொடியேறிப் பத்தாம் நாளாகிய விசாக நாளில் தீர்த்தவாரியும், சுவாதி நாளில் திருத்தேரும் சிறப்பாக நடைபெறும். ஐந்தாம் நாள் இடப வாகனக் காட்சியும், ஏழாம் நாள் இறைவருக்கு (வைசியப் பெண்) திருக்கலியாணக் காட்சியும் நிகழும். பதினொராம் நாள் முத்துப்பல்லக்கில் சுவாமி வீதிக்கு எழுந்தருளுவர். மிகச் சிறப்பாக விழா நடைபெறும்.

பாச்சூர் கிராமத்து வணிக (செட்டியார்) குடும்பத்தார்கள் ஆண்டுதோறும் இத்திருக்கோயில் பிரமோற்சவத்தின் ஏழாம் நாள் விழாவாகிய திருக்கலியாண உற்சவத்தைச் சிறப்புடன் செய்து வருகின்றனர், திருக்கலியாண உற்சவம் முடிந்ததும் சுவாமியும் அம்மனும் முத்துப் பல்லக்கில் சிறப்பாகப் பாச்சூருக்கு எழுந்தருளி வருவர்.

இவ்வாலயத்து அம்மன் கோயில், சுவாமி கோயிலுக்கு முன் மண்டபத்திலேயே இருப்பதால் பெண் வீட்டாராகிய செட்டியார்கள் யாவரும் முன் மண்டபத்திலேயே தங்கித் தங்கள் சார்பில் திருக்கல்யாண உற்சவத்தைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

பாச்சூர் செட்டிப் பெண்கள் அனைவரும் சுவாமி சந்நிதிக்குச் செல்லுங்கால் முக்காடிட்டு முகத்தைமறைத்துச் செல்வர், இன்றும் அப்பழக்கம் இருந்துவருகிறது என்பர். சுவாமி மருமகன் என்பதும், மருமகன் முன்பு பெண்ணின் தாயார் நேரே செல்லுதற்கு நாணம் கொள்வது என்பதும் ஒரு மரபு. அதனால் சுவாமி சந்நிதிக்குச் செட்டிப் பெண்கள் முக்காடிட்டுச் செல்லும் பழக்கம் இருந்து வருகிறது.

இப்பிரமோற்சவத்தைத் தேவஸ்தானத்தாரும், கட்டளை தாரர்களும், பாச்சூர் கிராமத்தார்களும் மண்டகப்படி செய்பவர்களும் நடத்தி வந்தார்கள்,

இந்தப் பிரமோற்சவம் இத்திருக்கோயில் திருப்பணியை முன்னிட்டுச் சுமார் சில வருடகாலமாய் நடைபெறாமல் நின்றுவிட்டது. விரைவில் இப் பிரமோற்சவம் நடைபெற இருக்கிறது,

''மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் ... நல் விழாப் பொலிவு கண்டார்தல்'' பெரிய புராணம் என்றபடி மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் ஆலயங் களில் அவ்வப்போது திருவிழா நடைபெறுங் காலத்தில் இறைவனைத் தரிசித்து வணங்கின் மக்கட்பிறப்பு எடுத்ததன் பெரும் பயனை அடைவர் என்று வேதசிவாகமங்கள் கூறுகின்றன.

12 திருப்பணிகள்

திருவாசித் திருக்கோயில், மிகப்பழைமையானது, ஆதியில் இக்கோயில் முதற் பராந்தகன் முதலிய சோழ மன்னர்கள் பலர், சுந்தரபாண்டிய தேவர், ஹொய்சல மன்னர் முதலிய பல அரசர்கள் இக்கோயில் திருப்பணியைச் செய்துள்ளனர். இதனைப் பின்வரும் கல்வெட்டுக்களின் குறிப்புக்களால் அறியலாம். சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்னர் பல திருப் பணிகள் நடைபெற்று மகா கும்பாபிஷேகம் நடந்தேறியது. அதன்பின், கி, பி. 1935 யுவ ஆண்டு ஆவணி மாதம் 19-ம் நாள் அனுஷ நட்சத்திரத்தில் சுவாமிக்கு அட்டபந்தன மருந்து சாத்திக் கும்பாபிஷேகம் நடந்தேறியது.

அதன் பின்னர், கி. பி. 1942ல் சுமார் 4000 ரூபாய் செலவில் இத்திருக்கோயிலில் திருக்குளம், திருமதில்கள், மடைப்பள்ளி, அம்மன் கோயில், துவஜஸ்தம்பம் மண்டபம், சகஸ்திரலிங்க மண்டபம் முதலிய இடங்கள், தேர் நிலை மண்டபம் முதலியன பழுது பார்க்கப் பெற்றன, சில இடங்களில் கீழ்த்தள வரிசை போட்டும், மற்றைய மேலிடம் தட்டோடு போட்டும் துவஜஸ் தம்பம் புதிய பித்தளைத் தகடு போட்டும் செப்பம் செய்யப் பெற்றுள்ளன,

பிறகு, 4-7—1957ல் சென்னை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் உயர்திரு. A. உத்தண்டராமப் பிள்ளை, I. A. S. அவர்கள் இக் கோயில் திருப்பணியைத் துவக்கி வைத்தனர். அதன்பின் பற்பல காரணத்தால் திருப்பணி செயல் படாமல் இருந்துவிட்டது.

அதன் பிறகு, இந்த ஆலயத்தின் திருப்பணியானது, திருச்சிராப்பள்ளி இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் அவர்களின் ந. க. எண். 3282/69–(23-6-69)ன் உத்தரவின் கீழ்க்கண்ட தலைவர்களும் உறுப்பினர்களும் அங்கீகரிக்கப் பெற்று, அவர்களின் துணைகொண்டு 4-2-1972ல் மகா கும்பாபிஷேகம நடைபெற்றது,

இத்திருக்கோயில் திருப்பணி செய்த புண்ணிய சீலர்களின் பெயர்கள் வருமாறு :

கோவத்தகுடி திரு. H. தாண்டவராயப் பிள்ளை அவர்களால் சுவாமி கோயில் ஸ்தூபி விமானம் பழுது பார்த்துப் புதுப்பிக்கப் பெற்றுள்ளது.

திருவாசி திரு. T. R. கலியாணசுந்தரம் பிள்ளை அவர்களால் ஸ்ரீ செல்வவிநாயகர் கோயில் மேல் விமானம் புதியதாகக் கட்டப்பெற்றுள்ளது.

மண்ணச்சநல்லூர் திரு. M. A. திருநாவுக்கரசு பிள்ளை அவர்களால் ஸ்ரீ நடராக்ர் கோயில் புதிய விமானம் கட்டப் பெற்றுள்ளது.

திருச்சிராப்பள்ளி, உறையூர் பசிப்பிணி மருத்துவர், திருமுறைப் பேரன்பர், அருட்சுவி திரு. மு. ஆ. அருணாசல முதலியார் அவர்கள் மனைவியார் திருமதி மாரியாயி அம்மாள் அவர்களால் அம்பாள் கோயில் மூலஸ்தான விமானம் புதுப்பிக்கப் பெற்றுள்ளது.

திருவாசி திரு. T. M. சுந்தரம் பிள்ளை அவர்களால் ஸ்ரீ சுப்பிரமணியர் மூலஸ்தானம் பழுது பார்த்துப் புதுப்பிக்கப் பெற்றது.

திருச்சிராப்பள்ளி, ஆண்டார் வீதி, தன்வந்திரி டாக்டர் திரு. S. பஞ்சைநாத சர்மா அவர்களால் ஸ்ரீ சகஸ்ரலிங்கம் கோயில் விமானம் பழுது பார்த்துப் புதுப்பிக்கப்பெற்றது.

மதுரை மாவட்டம் பெரியகுளம் திரு. B S. இராமரத்தினம் ஐயர் அவர்களால் ஸ்ரீ கஜலட்சுமி கோயில் பழுது பார்த்துப் புதுப்பிக்கப்பெற்றது.

திருச்சிராப்பள்ளி, பெரிய கடை வீதி, அப்பாங் மளிகை திரு. B, ஆதிநாராயணஞ் செட்டியார் அவர்களர்ல் இரண்டாவது கோபுரம் பழுது பார்த்துப் புதுப்பிக்கப்பெற்றது.

இத்தேவஸ்தானத்தாரால் முன் இராசகோபுரம், வெளிச் சுற்று மதில் முதலியன பழுது பார்த்துப் புதுப்பிக்கப்பெற்றது.

இத்திருக்கோயிலில் இன்னும் பற்பல திருப்பணிகள் நடைபேற வேண்டியதற்குத் திருப்பணிக் குழுவினர் நன்கொடை யாளர்களை மிக எதிர்பார்க்கின்றார்கள்.

13. நிர்வாகம்

இந்தத் திருப்பாச்சிலாச்சிராமத்துத் திருக்கோவிலின் நிர்வாகம், கி. பி. 1928ல் திருச்சி மாவட்டத் துறையூர் இந்து தேவஸ்தானக் கமிட்டி, திருச்சி–லால்குடிப்பகுதி தேவஸ்தானக் கமிட்டியார் அவர்கள் ஆளுகைக்குட்பட்டும், அதன் பிறகு கி.பி. 1939ஆம் ஆண்டு முதல் சென்னை இந்துசமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்குட்பட்டும், அதன் பின் கி, பி. 1950 ஆம் ஆண்டில் ஷ ஆட்சித் துறையின் ஆணையர் அவர்களால் B. O. No. 4320 Dated 4—8 1950 இன் உத்திரவில் ஸ்கீம் (SCHLME) பிறப்பிக்கப்பட்டு நிர்வாக அதிகாரி நியமனம் செய்து நிர்வாக அதிகாரியால் ஆலய நிர்வாகம் செய்யப்பெற்று வருவதோடு, திருச்சிராப்பள்ளி மாவட்ட இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை (H. R. & C. E.) துணை ஆணையர் அவர்களால் மூன்று ஆண்டு களுக்கு ஒருமுறை தக்க பிரமுகர்களை அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டு அவர்களது துணை கொண்டும் ஆலய நிர்வாகம் செய்யப்பெற்று வருகிறது.

14. வருமானமும் சொத்துக்களும்

இந்தச் சிவாலயத்திற்கு, 1928-ஆம் ஆண்டு லால்குடி பிரிவு இந்து சமய தேவஸ்தானக் கமிட்டியாரால் பதிவு செய்யப்பட்ட 38-வது சட்டப்பிரிவு பதிவு ஏட்டின்படி இத்திருவாசி கிராமத்தில் உள்ள நிலங்களின் விவரம் :

1.	இனாம் நன்செய் நிலங்கள்	ஏக்கர்	15,	செண்டு	41
2.	,, புன்செய் ,,	,,	12,	,,	77
3.	அயன் நன்செய் நிலங்கள்	,,	9,	,,	90
4.	,, புன்செய் ,,	,,	9,	,,	48
	கூடுதல் நிலங்கள்	ஏக்கர்	47	செண்டு	56

ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கும் வருவாய் விவரம் :

1.	நெல் குத்தகை மதிப்புக் கூடுதல் சுமார்	ரூ. 30.000—00
2.	தோப்புகளின் ரொக்கக் குத்தகை கூடுதல் சுமார்	ரூ. 30,000—00
3.	அரசாங்கத்தினிடம் மோகினி மானியம் உண்டியல் மற்றும் வருவாய்	ரூ. 306—00
4.	இதர வருமானம் கூடுதல் சுமார்	ரூ. 2,000—00
		ரூ. 62,306—00

தற்போது தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் மதிப்பிடப்பெற்ற பொன், வெள்ளி இவற்றின் திருவாபரணங்கள் உள்ளன.

இக்கிராமத்தில் இவ்வாலயத்திற்குச் சொந்தமான நத்தம் சர்வே எண் 46/1-ல் உள்ள வீடு ஒன்று உள்ளது. அதில் இவ்வாலய ஊழியர் வாடகை செலுத்தி வசித்து வருகிறார்.

ஆலயத்தின் கிழக்கே பெரிய தேர் நிலைப்பிடத்தில் உள்ள மாடிமண்டபம் ஒன்று உள்ளது. அம்மண்டபத்தில் தேர் ஓட்டத்தின் போது சுவாமி இறங்கித் தக்க ஏற்பாடுடன் தேர்மீது எழுந்தருளுவர்.

15. சிற்பச் சிறப்புக்கள்

இத்தலத்து ஆலயத்துள் துவஜஸ்தம்பம் (கொடி மரம்) இருக்கும் பெரிய மண்டபத்தின் (அவுடைப் பிள்ளை மண்டபம்) வடக்கு வரிசைத் தூண்களில் ஒன்றிலே சன்னல் கம்பிகள் போல் குடைந்து அதன் உட்புறத்தில் பந்துபோன்று எடுக்கமுடியாத உருண்டைக்கல் ஒன்றைச் செதுக்கி வைத்திருக்கும் சிற்பத்தின் திறம் போற்றத்தக்கதாம். இவ்வாலயத்தின் இரண்டாம் பிரகாரம் வடக்குப் பகுதியில் பெரிய மண்டபத்தை ஒட்டி இருக்கும் சிறுமண்டபத்துள் ஒரே இலிங்கத்தில் 1000 இலிங்க வடிவம் அமைந்துள்ளன. இம்மண்டபம் சகஸ்திரலிங்க மண்டபம் எனப் பெயர் பெறும்.

இத்தலத்து நடராச மூர்த்தியின் விக்கிரகம் முடித்த சடையினைக் கொண்டுள்ளது. இதனைத் திருஞானசம்பந்தர், ''துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச் சுடர்சடை சுற்றி முடித்து'' என்று பாடியுள்ளார் நடராச மூர்த்தியின் ஊன்றிய திருவடியின்கீழ் முயலகன் என்னும் அரக்கன் இல்லை. முயலகனுக்குப் பதில் பாம்பு அமைந்துள்ளது.

இங்குள்ள திருஞான சம்பந்தர் விக்கிரகம் நின்றுகொண்டும் வலக்கைச் சுட்டுவிரலை நீட்டிக் காட்டிக்கொண்டும், இடக்கையில் கிண்ணம் தாங்கிக் கொண்டும் அழகுடன் உள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் விக்கிரகம் இரண்டு கைகளிலும் தாளங்களைக் கொண்டு நின்றகோலத்துடன் உள்ளது. வேறு எந்தத் தலத்திலும் சுந்தர் கையில் தாளம் இல்லை.

இவ்வாலயத்தின் முதற் கோபுரம் (கிழக்குக் கோபுரம்) உயர்ந்து ஓங்கி ஐந்து அடுக்கு மாடங்களைக் கொண்டு சுதை

(சுண்ணாம்பு)ச் சிற்ப வேலைப் பாடுகளுடன் திகழ்வது. கோபுரம் மூன்று அடுக்கு மாடங்களைக் கொண்டும், பழைய வடிவில் சிற்ப உருவங்களைக் கொண்டும் விளங்குவது ; இஃது ஆதி பழைமையான கோபுரம் ஆகும். இக்கோபுரத்தின் அடிதளச் சுவரில் பற்பல அரசர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன.

16. கல்வெட்டுக்கள்

இத்தலத்து–திருப்பாச்சிலாச்சிராமத்துத் திருக்கோயில் கருவரை (கருபக்கிரக) வெளி வட சுவரிலும். அர்த்த மண்டப வாயிற்படியின் இரு பக்கங்களிலும், இரண்டாம் (உட்) கோபுரத்து மேற்கு நோக்கிய திருவாயிலின் தென்பால் சுவர், வடபால் சுவர் முதலிய இடங்களில் பற்பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றுள் உள்ள சில செய்திகள் பின் வருமாறு ;

இத்தலம் முதற்பராந்தக சோழன் (கி. பி. 907—953) காலத்துக் கல்வெட்டில் பாச்சில் திருவாச்சிராமம் என்றும், முதலாம் இராசராசசோழன் (கி. பி. 983 –1014) முதலாம் இராசேந்திரசோழன் (கி. பி. 1012—1044), முதலாம் இராசாதிராசன் (கி பி. 1018—1054), இரண்டாம் இராசேந்திரன் (கி பி. 1051 1063) இவர்கள் காலத்துக் கல்வெட்டுக்களில் மேல்மழ நாடாகிய இராசாசிரிய வளநாட்டுப் பாச்சில் கூற்றத்துப் பாச்சில் திருவாச்சிராமம் என்றும், முதற் குலோத்துங்க சோழன் 27ஆம் ஆண்டு (கி. பி. 1070 –1120) கல்வெட்டில் தியாகவல்லி வளநாட்டுப் பாச்சில் கூற்றத்து மீபிலாற்றுப்பாச்சில் திருவாச்சிராமம் என்றும், இரண்டாம் குலோத்துங்க சோழனின் 10-ஆம் ஆண்டு (கி. பி. 1133–1150) கல்வெட்டில் தின சிந்தாமணி வள நாட்டுப் பாச்சில் கூற்றத்துப் பாச்சில் திருவாச்சிராமம் என்றும் மூன்றாம் இராசராசசோழன் (கி. பி. 1216—1256) காலத்துக் கல்வெட்டில் இராசராச வள நாட்டுப் பாச்சில் கூற்றத்துத் திருவாச்சிராமம் என்றும்,

கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவர் (கி, பி 1216 123௮) காலத்துக் கல்வெட்டில் இராசராச வளநாட்டுப் பாச்சில் திருவாசிரம் என்றும் குறிக்கப் பெற்றுள்ளது.

இங்கு வள நாட்டின் பெயர் பலவாறு மாற்றப்பட்டிருப் பினும் கூற்றத்தின் பெயர் மாற்றப்படவில்லை ; ஊரின் பெயர் பாண்டியன் கல்வெட்டில் மட்டும் திருவாசிரம் என்று குறிக்கப் பெற்றுள்ளது. இப்பெயர் பிற்காலத்தில் திருவாசி என்று வழங்கப்பெற்றது போலும். (வளநாடு - இது சில நாடுகளை அல்லது கூற்றங்களை உட்கொண்டது ; ஒரு மாவட்டத்திற்கு (ஜில்லாவிற்கு)ச் சமம். கூற்றம் - நாடு. இது சில ஊர்களைக் கொண்டது ; ஒரு தாலூகாவிற்குச் சமம் ஆகும்

இவ்வாலயத்துக் கருப்பக்கிரகத்தை அடுத்த அர்த்த மண்டபத்தை முதற்பராந்தகன் கல்வெட்டில் பராந்தகன் மண்டபம் என்றும், அம்மண்டப வாயிற் படியினை (சுந்தரருக்குப் பொற்) கிழி கொடுத்தருளிய திருவாசல் என்றும், அதற்கு அடுத்த மகாமண்டபத்தினை முதற் குலோத்துங்கன கல்வெடடில் உத்தம சோழத் திருமண்டபம் என்றும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இத்திருக்கோயிலில் முதலாம் இராசராசசோழன் ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து அதற்கு இராச ராச விடங்கர் என்ற பெயர் சூட்டியதாக ஒரு கல்வெட்டு கூறுகிறது

குலோத்துங்க சோழன் கல்வெட்டுக்களில் இக்கோயிலில் விளக்கு (தீபம்) இடுவதற்கு நிலம், ஆடு முதலியன விடப்பட்ட செய்திகள் தெரிகின்றன.

இத்தலத்துத் திருக்கோயிலுக்கு ஹொய்ஸல மன்னன் வீரசோமேசுவரன் என்பவன் (கி. பி 1258) ஆட்சி 29-ல் பதினாயிரக் கலம் அரிசி கிடைத்ததாகத் தெரிகிறது அன்றியும் அம்மன்னன் இங்குப் பல திருப்பணிகள் செய்ததாகவும் குறிப்புகள் காணப்படுகின்றன.

[இந்த ஹொய்ஸல மன்னனாகிய வீரசோமேசுவரன் சமயபுரத்தைத் தனக்குத் தலைநகரராகக் கொண்டு வாழ்ந்து வந்தான். திருவானைக்காலில் சில திருப்பணிகள் செய்ததும் அன்றி, ஸ்ரீரங்கத்திற்குத் தெற்கே காவிரியின் வடகரையில் வீர சோமேசுவரம் (வீரேசுவரம்) என்ற ஒரு ஊரையும், திருச்சிராப் பள்ளிக்கு மேற்கே உய்யக்கொண்டான் திருமலையிலிருந்து சுமார் 3 மைல் தொலைவில் சோமேசுவரன்பேட்டை (சோமரசம் பேட்டை, என்ற ஊரையும் ஏற்படுத்தினான் என்று தெரிய வருகிறது).

இத்தலத்துத் திருக்கோயிலுக்கு நெல் அளக்கும் மரக்காலின் பெயர் இராசசஞ்சயன் என்றும், இத்திருக்கோயில் பண்டாரத்தில் (பொக்கிஷத்தில்) பொன் வெள்ளிகளை நிறுத்து வாங்கும் எடை கல்லின் பெயர் பாச்சில்கள் என்றும் கல்வெட்டுக்கல் கூறுகின்றன.

முதலாம் இராசராசசோழன் கல்வெட்டு ஒன்றில் இக்கோயில் பண்டாரத்திலிருந்து ஒரு கழஞ்சு (32 குண்டுமணி எடை) பொன் வட்டிக்கு வாங்கியவர்கள், ஓராண்டிற்கு ஒரு கலம் நெல் வட்டியாக அளந்த செய்தியைக் கூறுகிறது.

"ஸ்வதிஸ்ரீ ... ஸ்ரீ வீரசோமேஸ்வர இராசராச வளநாடு முறிகரைக்கு கிழக்கு குத்துவாய்க்காலுக்கு மேற்கும் இடையாற்று நாடும் குறைப்பற்றும் — திருவெள்ளரையும் உள்பட்ட அகரங் களிலார்க்கும் நாட்டவர்க்கும் இந்நாடு இருபத்தொன்பதாவது கடமை ஆயமும் வாசியாலுள்ளதும் கழித்து நீக்கி முறிகரைக்கு இரட்டைப் பாலாற்றுக்கு மேற்கு ஒட்டுப்படி கொள்ளவும், இதில் பாழென்ற நிலம் பயிர் பார்த்துக் கண்ட முதலுக்கு ஒட்டுப்படி கொள்ளவும். இடையாற்று நாடும் குறைப்பற்றும் இட்டபடி கொள்ளவும் இரட்டைப்பாலி உற்றுபார்த்துக் கண்ட முதலுக்கு அகலங்க வார்களுக்கு இறுத்த மரியாதைப் படியே கடமை கொள்ளவும் இப்படி இந்நாட்டு முதலான நெல்லிலே இருபதினாயிரக் கல நெல்லுச் செலவு கொண்டு பதினாயிரக் கல அரிசி அரைமனைக் கொட்டாரத்தே எடுத்து

அளக்கக் கடவார்களாக. காருக்குப் பயிரெறின நிலமும் நிரெறி விளையும் இடங்களும் பாழ்கிடவாதபடி பயிரெற்றக் கடவர்களாகவும் சொன்னோம். இப்படிச் செய்க இருபத்தொன்பதாவது முதல் நீர்பாய்ந்து விளையும் நிலங்கள் காரும் பாசனமும் வரம்பும் பொகந்தொறும் பாழ்கிடவாதபடி பயிரெற்றச் — சொன்னோம் இப்படி செய்க .... ஸ்ரீ ஹஸ்த ஒப்பம் 111உ''

இந்தக் கல்வெட்டு சுவாமி கோயிலின் கர்ப்பக் கிரகத்து வடசுவரில் உள்ளது.

17. புராண வரலாறுகள்

இப்பாச்சிலாச்சிராமம் என்னும் சிவத்தலத்தில் நிகழ்ந்த அற்புதச் செயல்கள் பெரிய புராணத்திலும், கர்ண பரம்பரைச் செய்தியிலும் உள்ளவை. அவை இங்குச் சுருக்கமாகக் கூறப் பெற்றுள்ளன.

1. உமாதேவியார் அன்னப் பறவை வடிவுகொண்டு பூசித்தல் :

ஒரு சமயம் திருக்கயிலை மலையில் சிவபெருமானோடு உமாதேவியார் எழுந்தருளி இருக்கும்போது, அம்மையார் எழுந்து இறைவனை வணங்கி நின்று, ''சுவாமி! தாங்கள் அருளிய இருபத்தெட்டுச் சிவாகமங்களில் கூறியவற்றுள் தங்களுக்கு விருப்பமான செயல் ஒன்றை எனக்கு அருள வேண்டுகிறேன்'' என்று விண்ணப்பித்தாள். உடனே சிவபெருமான் ''உமையே, நன்று வினவினாய்; நாம் மிகவும் விரும்புவது பூசனையே; அதுவும் சோழ நாடடுக் காவிரியின் வடகரையில் தேவர்கள் முனிவர்கள் தவம்புரியும் திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் தலத்தில் நம்மை ஒருவர் சிவாகம விதிப்படி பூசித்து வழிபடின் அவர்கள் எண்ணங்கள் யாவும் கைகூடும்'' என்று அருள் புரிந்தார்.

உமாதேவியார் சிவபெருமானிடம் தான் சிவபூசை செய்ய விரும்புவதைத் தெரிவித்து விடைபெற்றுக்கொண்டு திருப்பாச்சி-லாச்சிராமத்திற்குத் தம் சேடிமார்களுடன் எழுந்தருளினார்.

உமாதேவியார் தம் சேடிமார்களுடன் திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் தலத்தை அடைந்து அங்குள்ள பொய்கையில் நீராடி நியமத்துடன் பிறர் அறியா வண்ணம் அன்னப் பறவை வடிவம் தாங்கிச் சிவபெருமானை ஆகமப்படி பூசித்து வழிபட்டு வந்தாள். ஒரு நாள் அம்மையாரின் பூசைக்குச் சிவபெருமான் மிக மகிழ்ந்து அங்கேயே சிவகணநாதர்களுடன் எழுந்தருளி, ''உமையே, உனது அன்புள்ள பூசையினை ஏற்று மிக மகிழ்ந்தோம்; வேண்டியதைகேள்; அளிக்கின்றோம்'' என்றார். அப்போது உமாதேவியார் அடங்கா மகிழ்ச்சியுடன் எழுந்து வணங்கிப் பலவாறு துதித்து. ''எனது அண்ணலே, நான் நாடோறும் அன்ன வடிவுடன் இருந்து நீராடிய இங்குள்ள பொய்கைக்கு 'அன்னமாம் பொய்கை' என்ற திருப்பெயர் என்றும் வழங்கவேண்டும்; அதில் நீராடி உம்மை வழிபட்டவர்க்குப் பல பிணிகள் நீங்கி அவர்கள் இஷ்ட சித்திகளைப் பெறல் வேண்டும்; இவ்வரங்களே அடியவள் வேண்டுவது'' என்று வேண்டினாள். இறைவன், ''அவ்வாறே ஆகுக'' என்று அருள்புரிந்து உமாதேவியை அழைத்துக்கொண்டு திருக்கயிலைக்கு எழுந்-தருளினார் என்பது வரலாறு.

2. பிரமதேவன் சிவபெருமானை வழிபட்டுப் பேறுபெறுதல் :

ஒரு கற்பத்தில் பிரமதேவன் பல உயிர்களைப் படைத்தான். அப்போது உலகிலுள்ள அழகுகளையெல்லாம் ஒன்றாகத் திரட்டித் திலோத்தமை என்னும் தேவமாதைப் படைத்தான். அத்திலோத்தமையின் வடிவழகைக் கண்டு அவள் மீது மையல் கொண்டு அவளைக் கைப்பற்ற ஓடினான். நம் தந்தை மனம் மாறுபட்டு அடாத செயலைச் செய்ய முற்படுகின்றாரே என்று அவளும் ஓடி மறைந்தாள், இதனால் சிருஷ்டித் தொழில் பிரமதேவனுக்குத் தாமதம் ஆயிற்று; பெண்ணைக் காமுற்ற

குற்றமும் நேர்ந்தது. இதற்குப் பரிகாரம் வேண்டிப் பிரமன் பிரகஸ்பதியை அணுகி, யாவும் தெரிவித்தான். அவர், ''நீ ஒரு சிறந்த தலத்திலிருந்து சிவனைப் பூசிக்கின் இக்குற்றங்கள் தாமே விலகும்'' என்று கூறினார்.

உடனே பிரமன் சோழநாட்டுக் காவிரியின் வடகரையிலுள்ள திருவாச்சிராமம் என்னும் சிவத்தலத்தை அடைந்து, அன்னமாம் பொய்கையில் நீராடி நீலகண்டப் பெருமானை நாடோறும் பூசித்து வழிப்பட்டுத் தவம் செய்து வரலானான். ஒரு நாள் சிவபெருமான் பிரமதேவனின் பூசைக்கும் தவத்திற்கும் மகிழ்ந்து இடபாரூடராய் எழுந்தருளிக் காட்சிஅருளினார். அக்காட்சியினைப் பிரமதேவன் தரிசித்து வணங்கி நின்று, ''அண்ணலே, அடியேனது குற்றத்தைப் போக்கிப் படைப்புத் தொழிலை மீண்டும் எனக்கு அருள வேண்டும்'' என்று பலவாறு பிரார்த்தித்தான். சிவபெருமான் பிரமனுக்கு அருள் செய்து மறைந்தருளினார். பிரமனும் தன் உலகுசென்று தன் தொழிலில் நின்றான் என்பது வரலாறு.

இத்தலத்தில் பிரமதேவன் இறைவரைப் பூசித்ததால் இங்கு எழுந்தருளிய இறைவர், பிரமபுரீசுவரர் எனத் திரு நாமம் பெறலாயினர்.

3. கொல்லிமழவன் மகளின் முயலகநோய்* நீங்குதல்:

திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே உள்ளது கொல்லிமலை. அம்மலைத் தொடரைத் தனக்கு எல்லையாகக் கொண்டு ஆண்ட கொல்லிமழவன் என்ற ஒரு சிற்றரசன் திருப்பாச்சிலாச்சிராமம் என்ற சிவத்தலத்தைத் தனது இருக்கையாகக் கொண்டு வாழ்ந்துவந்தான். அவன் மழவர் குலத்தினன்;

---

* முயலக நோய் - இது கொடிய நோய்களுள் ஒன்று; இந்நோய் உணர்வற்றுக் கிடக்கவும், வலிப்புடன் கிடக்கவும், வயிற்று நோவு கண்டு நலிவுற்றுக் கிடக்கவும் செய்யவல்லது என்பர்.

ஆதலால் கொல்லிமழவன் எனப் பெயர் பெற்றான். (மழவர் ஒரு பிரிவைச் சார்ந்த வீரர்.) இவ்வரசன் சிவபெருமானை வணங்கும் பரம்பரைச் சைவ மரபினன் ஆவன். இவனுக்கு அழகிய மகள் ஒருத்தி இருந்தாள். அக்கன்னி இளங்கொழுந்து போல் ஒளி வீசும் அழகு நிறைந்த மேனியவள். அவளை முயலகன் என்னும் பெருநோய் பற்றி வருத்தியது. தன் பெண்ணின் துன்பத்தைக் கண்ட கொல்லிமழவன் மிகக் கவலை அடைந்தான். அவனுடைய பெருஞ் சுற்றத்தாரும் புலம்பி வருந்தினர். அரசன் மணிமந்திர ஔடதம் முதலிய பல வழிகளாலும் வைத்தியம் செய்து அப்பிணிகளைப் போக்க முயற்சித்தான். எப்பரிகாரத்தாலும் அந்நோயைத் தீர்க்க முடியாதவனாய்த் துன்பம் நீங்கும் பொருட்டுத் தன் மகளைத் திருக்கோயிலினுள்ளே கொண்டுபோய் மணிகண்டேசுரர் சந்நிதி முன்னே இட்டு வைத்தான்.

அப்போது திருஞானசம்பந்தர் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு காவிரிக்கு வடகரையில் உள்ள திருமாந்துறை என்னும் சிவத்தலத்திற்குச் சென்று தரிசனம் செய்து திருப்பாச்சிலாச் சிராமத்தையும் தரிசிக்க அப்பதிக்கு அண்மையில் எழுந்தருளி வருங்கால், ''மெய்ஞ்ஞானத்தினை உணரும் திருஞான சம்பந்தன் வந்தான்'' என்று ஊதுகின்ற திருச்சின்னங்களின் ஓசையினைக் கொல்லிமழவன் கேட்டான். உடனே தன் மகளை ஆலயத்திலேயே விட்டுவிட்டு விரைந்து வெளியே வந்து, தனது குடிமக்களுக்கு, ''நகரத்தை மகர தோரணங்களால் அலங்கரித்து நிறைகுடங் களையும் மணி களையும் ஏந்துங்கள்''- என்று உத்தரவு அளித்து, சம்பந்தருடைய முத்துச் சிவிகைக்கு முன்பு சென்று வீழ்ந்து வணங்கினான். ஞானசம்பந்தர் அவனுக்குச் அருள்செய்தார். மழவன் மன மகிழ்ச்சியோடு கைகள் சிரமேற்குவித்த வண்ணம் ஆளுடைய பிள்ளையாருடனே சென்று திருப்பாச்சிலாச்சிராமத்தின் திருவீதியின் வழியே அழைத்துக்கொண்டு வந்தான்.

திருஞான சம்பந்தர் திருக்கோயில் சமீபித்த உடனே சிவிகையினின்று கீழே இறங்கினார்; திருவாயிலைப் பணிந்து

கொண்டு சிவபெருமான் திருமுன்பு பணிய உள்ளே சென்றார்; அங்கே உணர்வழிந்து கிடந்த பெண்ணைப்பார்த்து, ''என்ன இது'' என்று வினவினார். கொல்லிமழவன் ஞானசம்பந்தரை வணங்கி நின்று, ''இவள் அடியேன் புதல்வி; இவளை முயலகன் என்னும் கொடியநோய் பிடித்துள்ளது; அந்நோய் எவ்வித சிகிச்சையினாலும் தீரவில்லை; அதனால் இவளைச் சிவசந்நிதி முன்னே கிடத்தியுள்ளேன்'' என்றான் அதனைக்கேட்ட ஆளுடைய பிள்ளையார் அருள்கூர்ந்து அந்நிலையில் நின்றபடியே சிவபெருமானைச் சிந்தித்து அவளுடைய நோயை நீக்கும் பொருட்டு, ''துணிவளர் திங்கள்'' என்ற திருப்பதிகம் தொடங்கி ஒவ்வொரு பாட்டின் இறுதியில், ''மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பு'' என்று வைத்துப் பாடித் திருக்கடைக்-காப்புச் சாத்தி(க் கடைசிப் பாடல்) அருளி வணங்கினார். உடனே கொல்லி மழவனின் மகள், பிணி நீங்கப்பெற்று எழுந்து தன் தாதை அருகு சென்று நின்றாள். அதுகண்ட மழவன் பெருமகிழ்ச்சி கொண்டு திருஞானசம்பந்தர் திருவடிகளில் தனது அருமை மகளும் தானும் சேர்ந்து வீழ்ந்து வணங்கினான். ஆளுடைய பிள்ளையாரும் சிவபெருமானைத் தரிசித்து வணங்கினார். பின்பு அங்குச் சிலநாள் அமர்ந்தருளினார் என்பது திருத்தொண்டர் புராணத்தில் கண்ட வரலாறு.

'' மழவன் சிறுமதலை வான் பெருநோய் தீர்த்த
குழகன் குலமறையோர் கோமான் '' ....

என்பது ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை ஆகும்.

கொல்லிமழவன் மகளுக்கு முயலகன் நோயின் காரணத்தால் இத்தலத்தில் எழுந்தருளிய நடராஜ பெருமான் திருவடியின் கீழ் முயலகன் என்னும் அரக்கன் ஆனால் அவர் பாம்பின்மீது நின்று நடிக்கின்றார். இவ்வாறு நடராசமூர்த்தியின் விக்கிரகம் இங்கு உள்ளது.

4. சுந்தரமூர்த்தி நாயனார் பொற்கிழி பெறுதல் :

சுந்தரமூர்த்தி நாயனார் பல திருப்பதிகளையும் தரிசித்துக் கொண்டு காவிரியின் வடகரையில் உள்ள திருஆனைக்கா உறையும் அண்ணலாரைத் தரிசித்து வணங்கி, அங்கு நின்றும் புறப்பட்டுத் திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் தலத்தை அடைந்தார். முன்பு திருக்கோபுரத்தைத் தரிசித்துத் திருக்கோயிலை வலம் வந்து உள்ளே சென்று எம்பெருமான் திருமுன்னர் வீழ்ந்திறைஞ்சி நின்று, பொன்பெற விரும்பித் துதிக்க, இறைவர், தாம் நினைத்த பொருள் அருளாதொழியவே, மனம் புழுங்கி வருந்தி, அருகே நிற்கின்ற திருத்தொண்டர்களின் முகம் நோக்கி முறைப்பாடு உரைப்பார் போல, ''இவரலாது இல்லையோ பிரானார்'' என்ற மகுடம் அமைத்து, திருக்கயிலையினின்றும் தான் நீங்கி இந்நிலவுலகத்திற்கு வந்தடைந்த காரணத்தை மனத்தில் எண்ணி வருந்தி, அடிமைத்திறத்தின் ஒருமைப்பாடு எழுபிறப்பினும் தொடரும் நிலையினை எடுத்துக்கூறி,

''வைத்தனன் தனக்கே தலையுமென் நாவும்'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடித் துதித்து. ''ஏசின அல்ல'' என்னும் திருக் கடைக்காப்பு (கடைசிப் பாடல்) பாடியதும் மணிகண்டர் பொற் கிழியினைக் (பொன் முடிப்பினை) கொடுத்தருளினார் என்பது திருத்தொண்டர் புராண வரலாறு.

சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் பொற்கிளி அருளிய இடம் அர்த்தமண்டபத் திருவாசல் எனத் தெரிய வருகிறது. இதனை முதலாம் இராசராச சோழன் 27வது ஆண்டு கல்வெட்டு ஒன்றில் ''கிழிகொடுத்தருளிய திருவாசல்'' என்று இத்தலத்தில் குறிக்கப்பெற்றுள்ளதால் நன்கு அறியலாம்

பின்பு சுந்தரமூர்த்தி நாயனார் பொற் கிழியினைப் பெற்று வணங்கி, அங்கு நின்றும் திருப்பைஞ்ஞீலி முதலிய தலங்களைத்

தரிசித்துத் திருஈங்கோய்மலையினை அடைந்தார். ஈங்கோய் மலையின்மீது எழுந்தருளிய ஸ்ரீ மரகதாசல நாதரைத் தரிசித்துப் பொன் வேண்டினார். அப்போது இறைவன் திருவருளால் அத்தலத்து விருட்சமாகிய புளிய மரத்தின் காய்களெல்லாம் பொன்னாகிக் கீழே உதிர்ந்தன. சுந்தரமூர்த்தி நாயனார் பொற் புளியங்காய்களை* எல்லாம் மகிழ்வுடன் வாரி எடுத்துக் கொண்டு மீண்டும், திருப்பாச்சிலாச் சிராமம் அடைந்து, அங்குச் சிவபெருமான் முன்னே நமக்கு அளித்த பொன்னையும், புளியங் காய்ப் பொன்னையும் உடன் வைத்து உரைகல்லில் உரைத்துப் பார்க்கும்போது, உடனே மாற்றில்லாத செழும் பொன்னாய் உள்ள சிவபெருமான் முன்னே எழுந்தருளச் சுந்தரர், இறைவர்க்குத் தாம் உரைத்த பொன் மாற்றினைக் காட்ட, அவர் ''ஒரு சிறிதும் வேறுபாடு இல்லையே'' என்றார். அதனால் திருப்பாச்சிலாச் சிராமத்து இறைவர்க்கு மாற்றறிவரதீசுவரர் என்ற திருநாமம் வழங்கலாயிற்று. சுந்தரமூர்த்தி நாயனார் சிலநாள் இத்ததலத்தில் எழுந்தருளி இருந்தார் என்பது வரலாறு.

5. இறைவன் திருக்கல்யாணம் :

திருப்பாச்சிலாச்சிராமத்தின் வடக்கே ஓடும் பங்குனி நதியின் வடகரையின் சமீபத்தில் உள்ள பாச்சூர் என்ற கிராமத்தில் கமலன் என்னும் ஒரு வணிகன் (செட்டி) வாழ்ந்து வந்தான். அவன் வைசிய குலத்தினன் ; சைவப் பற்றுடையவன் ; நாடோறும் திருப்பாச்சிலாச்சிராமத்துத் திருக்கோவிலுக்குச் சென்று மாற்றறிவரதேசுவரராகிய சிவபெருமானைத் தரிசித்து வழிபட்டு மக்கட் செல்வம் வேண்டிப் பிரார்த்தித்து வருவான். ஒரு நாள் கமலன் சிவதரிசனம் செய்து கொண்டு வீட்டிற்குச் செல்லும் வழியில் பார்வதி தேவியின்

---

* சுந்தரருக்குப் புளியங்காய்ப் பொன்னானதைச் சுந்தரர் புளியங்காய் ஈந்தது காண் அம்மானை, சுந்தரருக்குப் புளியங் காய் ஈந்ததுவே மாயின்' அத்துணையும் சொர்ணாங்காண் அம்மன் என்ற ஒரு சுந்தரர் அம்மானை நூல் கூறுகிறது.

அம்சமாக ஒரு பெண் மகவு கிடந்தது. அதன் அழுகுரல் கேட்டு அக்குழந்தையிடம் சென்று அதனை எடுத்துக் கொண்டு வீட்டிற்குப் போய் தன் மனைவியிடம் அளித்தான். அப்பெண் குழந்தை. நல்ல முறையில் வளர்ந்து மிக அழகுடன் அமலை என்ற பெயர் பெற்று விளங்கியது. அதற்குத் தக்க மணப்பருவமும் வந்துற்றது.

கமலன் தனது மைத்துனனுக்கே தன்பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று கருதி இருந்தான். அப்பெண்ணோ நாம் சிவபெருமானுக்கே ஆளாக வேண்டும் என்று மனத்தினாலே தவம் கிடந்தாள். இவ்வாறு இருக்க ஒரு நாள், கமலன் தனது மைத்துனனை அழைத்து "நீ விரைந்து காசியாத்திரை சென்று வந்தால் எனது பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளலாம்" என்று கூறிக் காசிக்கு அனுப்பி வைத்தான். அவனும் காசியாத்திரை சென்றான்.

ஒரு நாள் மாற்றறிவரதீசுவரராகிய சிவபெருமான், கமலன் மகள் அமலையின் கருத்தை நிறைவேற்ற, வைசிய குலத்துக் கமலனது மைத்துனன் வடிவங்கொண்டு, தன் தோழனாகிய சுந்தர மூர்த்தி நாயனாரையும் உடன் அழைத்துக் கொண்டு, கமலன் என்னும் செட்டியின் இல்லத்திற்குக் காசி யாத்திரையை முடித்து வருவதுபோலச் சிறப்புடன் சென்று, கமலன் மகள் அமலையைத் திருமணம் செய்து கொண்டார்.

பிறகு, சிவபெருமானாகிய மணமகன், தான் திருமணம் புரிந்த பெண்ணுடன் மாற்றறிவரதீசுவரர் திருக்கோயிலுக்குச் சென்று சிவதரிசனம் செய்து வருவதாகக் கமலன் முதல் யாவர்க்கும் கூறிப் பெண்ணுடன் சுந்தரரையும் அழைத்துக் கொண்டு விரைந்து புறப்பட்டுச் சென்றார். சிறிது நேரத்திற் கெல்லாம் காசியாத்திரை சென்ற மைத்துனன் கமலன்

வீட்டிற்கு வந்தான். யாவரும் கண்டு திகைத்து என் செய்வது என்று கலங்கினர். உடனே பெண்ணைக் கொண்டு வர, சிவபெருமானாகிய மணமகன் பின்னே ஓடினர். பின் தொடர்ந்து ஓடிவரும் வணிகக் குலத்தார்கள் அங்கேயே நின்று விடக் கருதி, அமலையானவன் தனது காற்சிலம்பைக் கழற்றி எடுத்து எறிந்தாள். அது சென்று விழுந்த இடத்தில் ஒரு சிறு நதியாகப் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தது. அது கண்ட யாவரும் செயலற்று அக்கரையிலேயே நின்று தன் மகளையும் மருமகனையும் காண விரும்பிப் புலம்பினர்

அப்போது மாற்றறிவரதேசுவரர் பார்வதியின் அம்சமாகிய அமலை என்ற செட்டிப் பெண்ணுடன் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி, எல்லோர்க்கும் காட்சி அளித்தருளினார். யாவரும் அம்மையப்பரைத் தரிசித்து வணங்கி ஆனந்தம் அடைந்தனர். பின்னர், இறைவன் அமலையுடன் திருக்கோயிலின் கண் எழுந்தருளினார்.

சிவபெருமான் செட்டிமார்களுக்கு ரிஷபாரூடராய்த் தரிசனம் தந்தருளிய இடம் பங்குனி நதியின் தென்கரை என்பர்; சிலம்பினால் பெருக்கெடுத்த நதியினைத் தற்போது பங்குனி நதி என்கின்றனர். இதன் முன்னைய பெயர் சிலம்பு நதி என்றும், அமலை நதி என்றும் வழங்கியது என்பது கர்ண பரம்பரைச் செய்தி ஆகும்.

18. தேவாரத் திருப்பாடல்கள்

1. திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள்

அருளிச் செய்த

திருப்பாச்சிலாச்சிராமத் திருப்பதிகம்

பண் – தங்கராகம் (முதல் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

துணிவளர்திங்கள் துளங்கி விளங்கிச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ் செய்துபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர்கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ இவர்மாண்பே. 1

கலைபுனைமானுரி தோலுடையாடை
கனல்சுட ராலிவர்கண்கள்
தலையணிசென்னியர் தாரணிமார்பர்
தம்மடிகள் ளிவரென்ன
தலைபுனல்பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
இலைபுனைவேலரோ ஏழையைவாட
இடர்செய்வதோ இவரீடே 2

வெஞ்சுடராடுவர் துஞ்சிருள்மாலை
வேண்டுவர்பூண்பது வெண்ணூல்
நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக
நண்ணுவர் நம்மைநயந்து
மஞ்சடைமாளிகை சூழ்தருபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
செஞ்சுடர்வண்ணரோ பைந்தொடிவாடச்
சிதைசெய்வதோ இவர்சீரே. 3

கனமலர்க்கொன்றை அலங்கலிலங்கக்
கனல்தரு தூமதிக்கண்ணி
புனமலர்மாலை அணிந்தழகாய
புநிதர்கொ லாமிவரென்ன
வனமலிவண்பொழில் சூழ்தருபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மனவலிமைந்தரோ மங்கையைவாட
மயல்செய்வதோ இவர்மாண்பே. 4

மாந்தர் தம்பால்நறு நெய்மகிழ்ந்தாடி
வளர்சடை மேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழல் தாளமோர்வீணை
முதிரவோர்வாய் மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறு பூதத்தர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சாந்தமணிமார்பரோ தையலைவாடச்
சதுர்செய்வதோ இவர்சார்வே. 5

நீறுமெய்பூசி நிறைசடைதாழ
நெற்றிக்கண் ணாலுற்றுநோக்கி
ஆறதுசூடி ஆடரவாட்டி
ஐவிரற் கோவணவாடை
பால்தருமேனியர் பூதத்தர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
ஏறதுவேறியர் ஏழையைவாட
இடர்செய்வதோ இவரீடே 6

பொங்கிளநாகமொ ரேகவடத்தோடு(டு)
ஆமைவெண் ணூல்புனை கொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய
குழகர்கொ லாமிவரென்ன
அங்கிளமங்கையோர் பங்கினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சங்கொளிவண்ணரோ தாழ்குழல்வாடச்
சதிர்செய்வதோ இவர்சார்வே.

ஏவலத்தால்விச யற்கருள்செய்து
இராவண னையீடழித்து
மூவரிலும்முத லாய்நடுவாப
மூர்த்தியை யன்றிமொழியாள்
யாவர்களும்பர வும்மெழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
தேவர்கள் தேவரோ சேழிழைவாடச்
சிதைசெய்வதோ இவர்சார்வே. 8

மேலதுநான்முகன் எய்தியதில்லை
கீழது சேவடிதன்னை
நீலதுவண்ணனும் எய்தியதில்லை
எனவிவர் நின்றதுமல்லால்
ஆலதுமாமதி தோய்பொழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பாலதுவண்ணரோ பைந்தொடிவாடப்
பழிசெய்வதோ இவர்பண்பே. 9

நானொடுகூடி சாயினரேனும்
நகுவர் அவரிருபோதும்
ஊணொடுகூடிய வுட்குநகையால்
உரைகளவைகொள வேண்டா
ஆணொடுபெண்வடி வாயினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பூணெடுமார்பரோ பூங்கொடிவாடப்
புனைசெய்வதோ இவர்பொற்பே. 10

அகமலியன்பொடு தொண்டர்வணங்க
ஆச்சிரா மத்துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தயழாக
புனிதர்கொ லாமிவரென்ன
நகைமலிதண்பொழில் சூழ்ந்தருகாழி
நற்றமிழ் ஞானசம்பந்தன்
நகைமலிதண்டமிழ் கொண்டிவையேத்தச்
சாரகி லாவினைதானே. 11

திருச்சிற்றம்பலம்.

2. சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

திருப்பாச்சிலாச்சிராமத் திருப்பதிகம்

பண் – தக்கராகம் (ஏழாந்திருமுறை)

திருச்சிற்றம்பலம்

வைத்தனன் தலைக்கே தலையுமென் நாவும்
நெஞ்சமும் வஞ்சமொன் றின்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை
உரைத்தக்கால் உவமனே யொக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத் தோடு
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பித்தரே யொத்தோர் நச்சில ராகில்
இவரலா தில்லையோ பிரானார். 1

அன்னையே யென்னேன் அத்தனே யென்னேன்
அடிகளே அமையுமென் றிருந்தேன்
என்னையு மொருவ னுளனென்று கருதி
இறையிறை திருவருள் காட்டாய்
அன்னமாம் பொய்கை சூழ்தரு பாச்சி
லாச்சிரா மத்துறை அடிகள்
பின்னையே அடியார்க் கருள்செய்வ தாகில்
இவரலா தில்லையோ பிரானார். 2

உற்றபோ தல்லால் உறுதியை யுணரேன்
உள்ளமே அமையுமென் றிருந்தேன்
செற்றவர் புரம்மூன் றெரியெழச் செற்ற
செஞ்சடை நஞ்சடை கண்டர்
அற்றவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத்
தடிகள் தாம் யாதுசொன் னாலும்
பெற்றபோ துகந்து பெறாவிடி லிகழில்
இவரலா தில்லையோ பிரானார். 3

நாச்சில பேசி நமர்பிற ரென்று
நன்றுதீ தென்கிலர் மற்றோர்
பூச்சிலை நெஞ்சே பொன்விளை கழனிப்
புள்ளினம் சிலம்புமாம் பொய்கைப்
பாச்சிலாச் சிராமத் தடிகளென் றிவர்தாம்
பலரையும் ஆட்கொள்வர் பரிந் (து) ஓர்
பேச்சிலர் ஒன்றைத் தரவில ராகில்
இவரலா தில்லையோ பிரானார் 4

வரிந்தவெஞ் சிலையால் அந்தரத் (து) எயிலை
வாட்டிய வகையின ரேனும்
புரிந்தஅந் நாளே புகழ்தக்க அடிமை
போகுநாள் விழுநா ளாகிப்
பரிந்தவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத்
தடிகள் தாம் யாதுசொன் னாலும்
பிரிந்திறைப் போதிற் பேர்வதே யாகில்
இவரலா தில்லையோ பிரானார். 5

செடித்தவஞ் செய்வார் சென்றுழிச் செல்லேன்
தீவினை செற்றிடு மென்று
அடித்தல மல்லா லாரையும் அறியேன்
ஆவதும் அறிவரெம் மடிகள்
படைத்தலைச் சூலம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத் (து) எம் பரமர்
பிடித்தவெண் ணீறே பூசுவ தானால்
இவரலா தில்லையோ பிரானார், 6

கையது கபாலங் காடுறை வாழ்கை
கட்டங்கம் ஏந்திய கையர்
மெய்யது புரிநூல் மிளிரும்புன் சடைமேல்
வெண்டிங்கள் சூடிய விகிர்தர்
பையர வல்குற் பரவைய ராடும்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
மெய்யரே யொத்தேர் பொய்செய்வ தாகில்
இவரலா தில்லையோ பிரானார், 7

நிணம்படும் உடலை நிலைமையென் றோரேன்
நெஞ்சமே தஞ்சமென் றிருந்தேன்
கணம்படிந் தேத்திக் கங்குலும் பகலும்
கருத்தினாற் கைதொழு தெழுவேன்
பணம்படும் அரவம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்(து)எம் பரமர்
பிணம்படு காட்டில் ஆடுவ தாகில்
இவரலா தில்லையோ பிரானார். 8

குழைத்(து)உவந் தோடிக் கூடுதி நெஞ்சே
குற்றேவல் நாடொறும் செய்வான்
இழைத்தநாள் கடவார் அன்பில ரேனும்
எம்பெரு மானென்றெப் போதும்
அழைத்தவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத்(து)
அடிகள்தாம் யாதுசொன் னாலும்
பிழைத்தது பொறுத்தொன்(று) ஈகில ராகில்
இவரலா தில்லையோ பிரானார். 9

துணிப்படும் உடையுஞ் கண்ணவெண் ணீறும்
தோற்றமும் சிந்தித்துக் காணில்
மணிப்படு கண்டனை வாயினாற் கூறி
மணத்தினாற் றெண்டனேன் நினைவேன்
பணிப்படும் அரவம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்(து)எம் பரமர்
பிணிப்பட ஆண்டு பணிப்பில ராகில்
இவரலா தில்லையோ பிரானார். 10

ஒருமையே யல்லேன் எழுமையும் அடியேன்
அடியவர்க் கடியனும் ஆனேன்
உரிமையால் உரியேன் உள்ளமும் உருகும்
ஒண்மலர்ச் சேவடி காட்டாய்
அருமையாம் புகழார்க் கருள்செயும் பாச்சில்
ஆச்சிரா மத்(து)எம் மடிகள்
பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யி
இவரலா தில்லையே பிரானார். 11

ஏசின அல்ல இகழ்ந்தன அல்ல
எம்பெரு மானெள் றெப்போதும்
பாயின புகழான் பாச்சிலாச் சிராமத்(து)
அடிகளை அடிதொழப் பன்னால்
வாயினாற் கூறி மனத்தினால் நினைவான்
வளவயல் நாவலா ரூரன்
பேசின பேச்சைப் பொறுத்தில ராகில்
இவரலா தில்லையோ பிரானார். 12

திருச்சிற்றம்பலம்.

திருப்பாச்சிலாச்சிராமத்தைக் குறிக்கும் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மாட்டூர் மடப்பாச்சிலாச் சிராமம்
முண்டீச்சரம் வாதவூர் வாரணாசி
காட்டூர் கடம்பூர்படம் பக்கங் கொட்டுங்
கடலொற்றியூர் மற்றுறையூர் அவையும்
கோட்டூர் திருவாமாத்தூர்கோ ழம்பமுங்
கொடுங் கோவலூர் திருக்குண வாயில் 13

—திருஞானசம்பந்தர்-க்ஷேத்திரக்கோவை.

அன்னமாம் பொய்கைசூழ் அம்ப ரானை
ஆச்சிரா மந்நகரும் ஆனைக் காவும்
முன்னமே கோயிலாக் கொண்டான் தன்னை
பூவுலகுந் தானாய மூர்த்தி தன்னைச்
சின்னமாம் பன்மலர்கள் அன்றே சூடுச்
செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்ந்தினானைக்
கன்னியம் புன்னைசூச் அந்தண் நாகைக்
காரோணத் தெடூஞான்றுங் காண லாமே. 14

—அப்பர்-திருநாகைக்காரோசுணம்,

திருச்சிற்றம்பலம்.

பதினோராந்திருமுறை

இட்ட குடிநீர் இருநாழி ஒருழக்காச்
சட்டவொரு முட்டைநெய் தான்கலந்(து) — அட்ட
வருவாச்சார் என்(று)அங்(கு) அழாமுன்னம் பார்சில்
திருவாச்சி ராமமே சேர் 15

—க்ஷேத்திரத் திருவெண்பா
ஐயடிகள் காடவர்கோன் நாயனார்.

1. கொல்லிமழவன் மகள் நோய் நீங்கியது :

அணிகிளர் தாரவன் சொன்ன மாற்றம்
அருளொடும் கேட்டந் நிலையில் நின்றே
பணிவளர் செஞ்சடைப் பாச்சின் மேய
பரம்பொரு ளாயி னாரைப் பணிந்து
''மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வ தோஇவர் மாண்பதென்று
தணிவில் பிணித விர்க்கும் பதிகத்
தண்டமிழ் பாடினார் சண்பை நாதர். 16

பன்னு தமிழ்மறை யாம்பதிகம்
பாடித் திருக்கடைக் காப்புச்சாத்தி
மன்னுங் கவுனியர் போற்றிநிற்க
மழவன் பயந்த மழலைமென்சொல்
கன்னி யுறுபிணி விட்டுநீங்கக்
கதுமெனப் பார்மிசை நின்றெழுந்து
பொன்னின் கொடியென ஒல்கிவந்து
பொருவலித் தாதை புடையணைத்தாள். 17

வன்பிணி நீங்கு மகளைக் கண்ட
மழவன் பெருகு மகிழ்ச்சி பொங்கத்
தன்தனிப் பாவையுந் தானுங் கூடச்
சண்பையர் காவலர் தாளில் வீழ
நின்ற அருமறைப் பிள்ளை யாரும்
நீரணிவேணி நிமலர் பாதம்
ஒன்றிய சிந்தை யுடன்ப ணிந்தார்
உம்பர் பிரான்திருத் தொண்டர் ஆர்த்தூர். 18

—பெரியபுராணம்–சேக்கிழார்.

2. சுந்தரர் பொன் பெற்றது :

அன்பு நீங்கா அச்சமுடன்
அடுத்த திருத்தோ ழமைப்பணியால்
பொன்பெ றாத திருவுள்ளம்
புழுங்க அழுங்கிப் புறம்பொருபால்
முன்பு நின்ற திருத்தொண்டர்
முகப்பே முறைப்பா டுடையார்போல்
என்பு கரைந்து ''பிரானார்மற்
றிலையோ'' என்ன எடுக்கின்றார். 19

நித்தமும் நீங்கா நிலைமையின் நீங்கி
நிலத்திடைப் புலங்கெழும் பிறப்பால்
உய்த்தகா ரணத்தை உணர்ந்துநொந் தடிமை
ஒருமையாம் எழுமையும் உணர்த்தி
''எத்தனை அருளா தொழியினும் பிரானார்
இவரலா தில்லையோ'' என்பார்
''வைத்தனன் தனக்கே தலையும் என் நாவும்''
எனவழுத் தினார்வழித் தொண்டர். 20

இவ்வகை பரவித் திருக்கடைக் காப்பும்
''ஏசின வல்ல'' என் றிசைப்ப
மெய்வகை விரும்பு தம்பெருமானார்
விழுநதிக் குவைஅளித் தருள
மைவளர் கண்டர் கருணையே பரவி
வணங்கி அப்பதியிடை வைகி
எவ்வகை மருங்கும் இறைவர்தம் பதிகள்
இறைஞ்சி அங்(கு) இருந்தனர் சிலநாள். 21

— பெரியபுராணம்–சேக்கிழார்

திருச்சிற்றம்பலம்

19. போது துதிப்பாடல்கள் :

விநாயகர்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புத்தியில் வைத்(து)அடி போற்றுகின் றேனே. 1

— திருமந்திரம்

சுப்பிரமணியர்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி. 2

— கந்தபுராணம்

மாற்றறிவரதீசுவரர்

மணிகொண்ட செழுந்திருப்பாற் கடற்றுயிலும்
பசுந்துளப மார்பத் தோனும்
கணிகொண்ட நெட்டிதழ்த்தா மரைப்பொகுட்டினன்
உறைஅயனும் கடவு ளோரும்
பணிகொண்ட குவலயமும் பணிந்தேத்தத்
திருநோக்கம் பாலித் தோங்கும்
மணிகொண்ட பெருங்கருணை ஆச்சிராம
நாதனையாம் அகததுள் வைப்பாம். 3

சீர்பூத்த இச்சாஞா னக்கிரியை
நீங்காமை தெரித்தால் என்னத்
பார்பூத்த பாச்சில்ஆச் சிராமத்து
இனிதமர்ந்து பரவிப் போற்றும்
தார்பூத்த புயத்தயன்மா லாதியருக்(கு)
அருள்சுரந்து தழையா நிற்கும்
கார்பூத்த மணிமிடற்றுப் பிரமபுரீ
சரைநாளும் கருதி வாழ்வாம். 4

— தனிப்பாடல்

பாலசௌந்தரி அம்மை

பன்னரிய மகிமைநிறை ஆனந்தப்
பெருகொளியே படிவ மாகி
உன்னருமங் களநிறைந்து விளங்கியிருந்(து)
எழில்கொழிப்ப உலகுக் கெல்லாம்
அன்னையென ஐந்தொழிற்கும் வித்தாதிப்
புவனங்கள் அனைத்து முய்ய
மன்னுபெருங் கருணைபொழி தையனா
லகிமலர்ந்தாள் வணக்கம் செய்வாம். 5

—புள்ளிருக்குவேளூர்ப் புராணம்

பொன்னிநதி புறத்தேகிய புலமெல்லாம்
வளஞ்சுரந்து பொலிவுற் றோங்கும்
வள்ளியொடு பொய்கையமர் ஆச்சிரா
மத்துமணி கண்டர் மகிழ
முன்னம்நீ அன்னவுரு வாகிஅவன்
கழல்நாளும் அர்ச்சித் தேத்திப்
பன்மலரால் வழிபடுபா லாம்பிகையுன்
பதமலரைப் பணிவேன் நானே. 6

—தனிப்பாடல்–உறையூர் மு. ஆ. அருணாசல முதலியார்

வேண்டுகோள்

மறைகள் நிந்தனை சைவநிந் தனைபொறா மனமும்
தறுகண் ஐம்புலன் களுக்கேவல் செய்யுறாச் சதுரும்
பிறவி தீதெனாப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோடு உறவும். 7

யாது நல்லன்பர் கேட்கினும் உதவுறும் இயல்பும்
மாத வத்தினோர் ஒறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுப தேசமெய் உறுதியும் அன்பர்
தீது செயினும் சிவன்செயல் எனக்கொளும் தெளிவும். 8

மனமும் வாக்கும்நின் அன்பர்பால் ஒருப்படு செயலும்
கனவி லும்உன(து) அன்பருக்(கு) அடிமையாங் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித! நின்புகழ் நாடொறும் உரைத்திடும் பொலிவும். 9

தீமை யாம்புறச் சமயங்கள் ஒழிந்திடும் திறனும்
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறா மனனும்
ஏழு றும்பர தாரம்நச் சிடாநநன் னோம்பும்
தூய்மை நெஞ்சில்யான் என து எனும் செருக்குறாத் துறவும். 10

துறக்கமீ(து) உறையினும் நரசில் தோய்கினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பம் துய்க்கினும்
பிறைக்கொழுந்(து) அணிசடைப் பெரும! இவ்வரம்
மறுத்திடா(து) எனக்குநீ வழங்கல் வேண்டுமால். 11

—திருவையாற்றுப் புராணம்.

மூர்த்தி தலம் தீர்த்தம்

தீர்த்தம் என்பது அன்னமாம் பொய்கையே
ஏத்தருத் தலமெழிற் பாச்சிலாச் சிராமமே
மூர்த்தி மாற்றுரை வரதர துருவே. 12

—தனிப்பாடல்.

சிவநாமம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. 13

—திருமந்திரம்.

வாழ்த்து

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைந்(து) ஓங்குக
தெய்வ வெண்டி ரு நீறு சிறக்கவே. 14

—பெரியபுராணம்.

திருப்பாச்சிலாச்சிராமத்து
ஸ்ரீ மாற்றுரை வாதீசுவரர் திருவடி போற்றி.